விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 09 ஞாயிற்றுக்கிழமை (21.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 64

ராம்கோ


MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# இந்திய அரசு எனது உறவினர்; ஏனைய நாடுகள் நண்பர்கள்!



## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்தியா எனது உறவினர், ஏனைய உதவி வழங்கும் நாடுகள் எனது நண்பர்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். த ஹிந்து நாளிதழுக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.**

இந்திய த ஹிந்து நாளிதழுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது, வடக்கிலுள்ள மக்கள் எனக்கு வாக்களிக்கவில்லை என்பது குறித்து நான் கவலை கொள்ளவில்லை.

அங்கும் சிலர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## 53 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று வரை 53 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான (15 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் சிறுவர் போராளிகள் மே மாதம் 10-ம் திகதி விடுதலை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிறுவர் போராளிகள் அனைவரும் மே மாதம் 10 ஆம் திகதி விடுவிக்கப்படுவார்கள் என அரசாங்கத்தின் பாதுகாப்பு இணையத்தளம் தெரிவித்துள்ளது.

தடுப்புக் காவலில் உள்ள 18வயதுக்கும் குறைந்த 514 முன்னாள் சிறுவர் போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஜகத் வெல்லவத்த தெரிவித்துள்ளார். அரசு அண் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை

### அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தை கவிழ்க்கும் எந்தவிதத் திட்டமும் அமெரிக்காவுக்குக் கிடையாது என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிக்கா புட்டினாசுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக வெளியான ஊடகச் செய்திகளில் உண்மை (15 ஆம் பக்கம் பார்க்க)

## சுயநிர்ணய கோட்பாட்டை முன்வைத்து கூட்டமைப்பு உறுதியோடு செயற்படும்

### இரா.சம்பந்தன் செவ்வி



(கொழும்பு)

தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைகளை அடிப்படை கோரிக்கைகளாக வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுதியோடு செயற்படும் என்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை யதார்த்த ரீதியாக தீர்ப்பதற்கு உரிய வழிகளில் அதனை முன்னெடுக்கும் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தற்போதுள்ள தாயக அரசியல் சம்பந்தமாக கனடிய தமிழ் வானொலிக்கு வழங்கிய நேர்காணலிலேயே இரா.சம்பந்தன் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் எதிரணியில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருந்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி நாடாளுமன்ற சபாநாயகராக செயற்பட்ட வி.ஜெ.மு.லொக்குபண்டார நேற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார்.

பண்டாரவளை நகரில் நேற்று இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளு (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக சிவாஜிலிங்கம் தலைமையில் புதிய கட்சி?

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் கட்சி ஒன்று உருவாக்குவதற்கு கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட முன்னாள் நாடா (15 ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவொரு நாடு எதிர்த்தாலும் இராணுவ நீதிமன்றில் விசாரணை

### சிரேஷ்ட இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவும் பிரித்தானியாவும் எதிர்ப்பு வெளியிட்டாலும் சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2009 இலக்கம் 35 கூட்டுப்படைத்தலைமை அதிகாரி சட்டமூலத்தின் கீழ் ஜெனரல் சரத் பொன்சேகா (15 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள் தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus

MORE BRANDS-MORE CHOICE

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

(C-4172)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேசும் படம்



ஆணென்ன...பெண்ணென்ன...

## மீளக்குடியமர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

நலன்புரி நிலையங்களிலிருந்து மீள் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு அவர்களின் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயலணி, மாகாண ஆளுநர் ஆகியோரின் வழிகாட்டலில் அரசாங்க அதிபரின் செயற் திட்டம் ஊடாக அரசசார்பற்ற நிறுவனங்களினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகள் பட்டியல் பிரதேச செயலர்களினால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அப்பட்டியல் அரச அதிபரின் சிபார்சுடன் சம்மந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத் துவிச்சக்கர வண்டி விநியோகத்தின் போது பிரதேச செயலர், சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், கல்வித்திணைக்களத்தின் உயர் அதிகாரி, பயனாளிகளின் பெற்றோர் ஆகியோர் கட்டாயம் பிரசன்னமாகி இருந்து பொருத்தமான முன்னுரிமையில் விநியோகம் செய்யப்பட வேண்டும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என அரச அதிபரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


### விற்பனைக்கு

எம்மிடம் குறைந்த விலையில் பிரஸ்கட்டர் மெஷின்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0774911793

(469)

### லாலா நீல சலவைத்தூள்

எனது அன்புக்குரிய மாணவர்களுக்காகவே தயாரிக்கப்பட்டது.

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

(க-4480)

### தேவை

பழைய காட்போட் 1Kg 5/=, பழைய பிளாஸ்டிக் கதிரை கிலோ 20/=, கொப்பி, புத்தகங்கள், பத்திரிகைகள் கூடிய விலைக்கு வாங்கப்படும்.

நிஹேறான் டிரேடர்ஸ்
வைத்தீஸ்வரா பாடசாலைச் சந்தி,
204,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (435)


## இளைஞன் மீது வாள்வெட்டு மாதகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கிரிக்கெட் விளையாடிவிட்டு வீடு சென்ற இளைஞன் மீது இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட வாள் வெட்டுத் தாக்குதலில் அவ் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாதகலில் நேற்று மாலை 5.00 மணியளவில் இடம் பெற்ற இவ் சம்பவத்தில் செல்லையா சர்வீந்திரன் (வயது 24) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். (ச-14)

## மண்டைதீவில் இருந்து இன்று பாலைதீவுக்கு யாத்திரை

(மண்டைதீவு)

மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய பங்கு மக்கள் இன்று பாலைதீவுக்கு திருத்தல யாத்திரை மேற்கொள்கின்றனர்.

ஆலய பங்குத்தந்தை அருட்திரு போல் றொகான் அடிகளாரின் தலைமையில் செல்லும் திருத்தல யாத்திரையில் சுமார் எண்ணூறு பேர் இடம் பெறுவர்.

எண்பது இயந்திரப் படகுகளில் இவர்களின் திருத்தலயாத்திரை இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். (ந)


'ஜெய் குருதேவ்'

### தவத் திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்
அவர்களின்
### வாழும் கலைப்பயிற்சி பாகம்-1



(சுதர்சனக்கிரியா எனும் சிறப்பு மூச்சு பயிற்சி உள்ளடக்கியது)

### இலவச அறிமுக உரை

1. இடம்:- கம்பன் கோட்டம்-நல்லூர்
காலம் :- 22.02.2010 (திங்கட்கிழமை)
மாலை 5.00 மணிக்கு
பயிற்சி நாட்கள்:- 23.02.2010 முதல் 27.02.2010 வரை

2. இடம்:- கமநல சேவை நிலைய வீதி, ஆலடி, உடுவில்
காலம்:- 22.02.2010 (திங்கட்கிழமை)
மாலை 6.00 மணிக்கு
பயிற்சி நாட்கள்:- 23.02.2010 முதல் 25.02.2010 வரை
மாலை 5.30-7.30

3. இடம்:- ஞானசம்பந்தர் கலை மன்றம்
வல்லிபுர பரிகாரி ஒழுங்கை, பருத்தித்துறை
காலம்:- 26.02.2010 (வெள்ளிக்கிழமை)
மாலை 6.00 மணிக்கு
பயிற்சி நாட்கள்:- 27.02.2010 முதல் 01.03.2010 வரை
காலை 6.00-8.00 அல்லது
மாலை 5.30-7.30

மேலதிக விபரங்களுக்கு:-

சர்வதேச வாழும் கலை அற நிறுவனம்-யாழ்.மையம்

தொ.பே:- 021 222 7030, 0771 777 998
உடுவில் தொடர்புகளுக்கு 0777111331

(466)



# திருமண வாழ்வில்- 'பொன்விழா'

'குகன் குடிசை' பொலிகண்டியிலிருந்து 2010-02-21 இன்று திருமண வாழ்வில் ஐம்பது (50) ஆண்டுகள் நிறைவு செய்து கந்தவனநாதரின் அருளால்- 'பொன்விழா'க் காணும்,

**முருகுப்பிள்ளை சின்னத்துரை (சிவப்பிரகாசம்) & சின்னத்துரை சூரியகாந்தி**



சமாதான நீதவான் & மொழிபெயர்ப்பாளர்
(ஓய்வு பெற்ற அரச அலுவலர்)
ஆகியோருக்கு

'பொன்விழாக்காணும் பொன்மன முதன்மை குடும்ப விளக்குகளே
நீவிர் மீண்டும் வைரவிழா காணுவீரே
அன்பான மனைவியும் பண்பான கணவனுமாய்
காதலோடு கருத்தொருமித்தீரே
மணிமணியாய் ஐந்துபிள்ளைச் செல்வங்கள் பெற்றீரே
சிறப்புடனும் பண்புடனும் வளர்த்தீரே
முத்துமுத்தாய் பேரப்பிள்ளைகளும் காணப்பெற்றீரே
மாணிக்கமாய் மருமகனும் தேடிப் பிடித்தீரே
பவளங்களாய் மருமகள்களும் கிடைக்கப் பெற்றீரே
நீவிர் இன்று போல் என்றென்றும் மகிழ்வுடன் வாழ்வீரே
நாமும் என்றென்றும் உங்கள் நல்லாசிகளை நாடுவோமே'

| பிள்ளைகள்: | பேரப்பிள்ளைகள் |
|---|---|
| சடகோபன் & ஜெயம்: | கோகுலா, சுகன்யா, மயூரா |
| தயாபரன் & ஜமுனா: | டிசான், மிதுஷாயினி |
| கிரிதரன் & ரூபிகா: | லிஷாயினி, அம்பிகன் |
| நந்தினி & சிவலிங்கம்: | தனுசன், சபேசன் |
| குகபரன் & தாரணி: | லக்ஷனா, அவிஸ்னா |

T.P.: 021 320 7256, 0777766485

(444)


Emerald®
சேர்ட் என்றால்
எமரல்ட் மட்டுமே
உத்தரவாதமிக்க தரம்
தங்போது உங்கள் நகரிலும் சர்வதேச வர்த்தக நாமங்கள்
நிறுவனத்தால் குறிக்கப்பட்ட விலை
ஆர்யா
விற்பனையாளர்கள்:
தி. குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ் : 44,42 – கிராண் பஸார், யாழ்ப்பாணம்.
சிவராதா : 26 – 28, பெரியகடை பசார், யாழ்ப்பாணம்.
ஸ்டைல் பார்க் : 171, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
சீமாட்டி : 122, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்.
லிங்கம் சில்க் ஹவுஸ் : புதிய சந்தை, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கமலேஜ்வரி : 25, கிராண் பஸார், யாழ்ப்பாணம்.
தி. சங்கரப்பிள்ளை : 21, பவர் ஹவுஸ் வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம் யாழ். மருத்துவபீடத்துடனும் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்துடனும் இணைந்து நடத்தும் மாபெரும் விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும் இன்று மாலை 2.30 மணிக்கு கலைநிகழ்வுகளுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 27ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடைபெறவுள்ளது. (6-4)

## 187ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் பேதுரு மெதடிஸ்த திருச்சபை

(யாழ்ப்பாணம்)

கடந்த பல வருடங்களாக ஆன்மீக – சமூக திருப்பணிகளை ஆற்றிய யாழ்ப்பாணம் பரி பேதுரு மெதடிஸ்த திருச்சபை இன்று ஞாயிற்றுக்கிழமை தனது 187ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடுகின்றது.

இச்சபை கடந்த காலங்களில் இடம்பெற்ற துன்ப வேளைகளில் பொதுமக்களுக்கு துயர் நீக்கும் அருளையும் ஆசியையும் வழங்கியதுடன் பல்வேறு நற்பணிகளையும் ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# மோட்டார் வாகனங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு வரி மீளளிப்பு

(சாவகச்சேரி)

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி மோட்டார் வாகனங்களுக்காக அறவிடப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு வரி மீளளிப்பு செய்யப்படும் வகையில் தென்மராட்சி பிரதேச செயலக மோட்டார் வாகனப் பிரிவினர் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை அவ்வரிப்பணத்தை மீளளிப்புச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை வரை மீளளிப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என தென்மராட்சி பிரதேச செயலாளர் செ. ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (6-4-29)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் வருடாந்த இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது குருதிக் கொடையாளர்களுக்கு நினைவுப் பரிசாக ரீசேர்ட் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (6-4)

## ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் இம்மாதம் முதல் தபால் மூலம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்களை இம்மாதம் முதல் தபால் மூலம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். இதில் முகவரி மாற்றம் இருப்பின் உடனடியாகப் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (6-4-29)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியும் மேலைத்தேய வாத்திய இசை அரங்கேற்றமும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர். கா. சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம வீருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கு. சாந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

## பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வல்வை தென்மேற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வல்வை ஒன்றியத் தலைவர் மு. தங்கவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் செயலாளர், பொருளாளர் அறிக்கைகள் சமர்பித்தல் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு, பிரேரணைகள் சமர்ப்பித்தல் போன்றன இடம்பெறவுள்ளன. (6-4)

## சாரண நிறுவுனர் தின நிகழ்வு

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் சாரண நிறுவுனர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் எம். ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் எம். பரமானந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4-19)

## இராசி பலன்

*21-02-2010*
*(மாசி 9, ஞாயிற்றுக்கிழமை)*
*சப்தமி பிற்பகல் 2.25 மணி வரை*
*கார்த்திகை பின்னிரவு 3.35 மணி வரை*
*இராகு காலம் 5.01-6.31 மணி வரை*
*சுப நேரம் 9.31-11.01 மணி வரை*
*முதலாம் தவக்கால ஞாயிறு*
*கார்த்திகை விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, தனவிரயம், பெரியோர் உதவி, போசன சுகக்குறைவு. |
| இடபம் | வெகுமானம், தெய்வதரிசனம், நண்பர்கள் உதவி, தொழில் சிந்தை. |
| மிதுனம் | சோம்பல் நிலை, பித்தரோகம், அதிக பிரயாசை, சயனசுகக் குறைவு. |
| கடகம் | தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம். |
| சிங்கம் | பிரபுத்தனம், எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், தெய்வ சிந்தை. |
| கன்னி | எதிர்பாராத செலவு, தொழில் சிந்தை, தந்தைவழி உறவு, பயந்த சுபாவம். |
| துலாம் | உடல்நலக்குறைவு, வாகன பயம், வீண்பகை, போசனசுகம். |
| விருச்சிகம் | நல்ல வரவேற்பு, தெய்வசிந்தை, பிரயாண நன்மை, போசனசுகம். |
| தனுசு | தெளிந்த சிந்தை, காரிய நன்மை, போசன சுகம், உறவினர் சந்திப்பு. |
| மகரம் | கௌரவக்குறைவு, ஆரோக்கியக் குறைவு, போசனசுகம், பயணம். |
| கும்பம் | மாதா சுகம், சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, சுபசெலவு. |
| மீனம் | அந்நியர் சந்திப்பு, வாகன சுகம், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை. |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## தப்பிக்க வழியுண்டா?

"வக்கீல் சேர்! நீங்கதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்!"

"என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க!"

"நான் ஒரு தப்புப் பண்ணிவிட்டேன்.

அதாவது டாக்டர் என்று ஒரு போர்ட்டை மாட்டிக் கொண்டு பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தேன். நான் ஒரு போலி டாக்டர் என்பது சனங்களுக்குத் தெரிந்துவிட்டது. தலைமறைவாகி விட்டேன். இப்போது பொலிஸ் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறது."

"போலி டாக்டர் தானே நீங்க... போலி நீதிபதி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"இல்லையே!"

"சூடானில் அப்படி ஒரு ஆசாமி சமீபத்தில் பிடிபட்டிருக்கிறார். அந்த ஆள் மிகவும் சுலபமாக சூடான் நீதியமைச்சில் நீதிபதி என்ற அடையாள அட்டையை வாங்கிவிட்டாராம். அதற்குப் பின் ஓம்பாடா என்ற நகரத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அந்த அடையாள அட்டையைக் காட்டி அங்கேயே பல வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்ல ஆரம்பித்தாராம். தீர்ப்பு என்றால் பெரும்பாலும் அபராதம் தான். அவ்வளவு பணமும் அவருடைய பொக்கற்றில்தான். இருந்தாலும் ஒரு நாள் உண்மை தெரிந்துவிட்டது. மாட்டிக் கொண்டார்."

"இப்படியெல்லாம் செய்வது ரொம்பத்தப்பு சேர்"

"நீங்க செய்ததும் தப்புத்தானே!"

"ஆமாம் சேர்! அதை இப்ப நான் உணர்கிறேன்."

"இருந்தாலும் ஏற்கனவே நீங்க செய்த குற்றத்துக்குத் தண்டனை அனுபவித்துத்தானே ஆகவேண்டும்!"

"ஆமாம் சேர். அந்தத் தண்டனையிலிருந்து தப்பிக்க ஏதாவது வழியுண்டா என்று கேட்பதற்குத்தான் உங்களைத் தேடி வந்திருக்கிறேன்."

"இப்படி வருவீங்க என்று தெரிந்துதான் நானும் போலி வேஷத்தில் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறேன்."

"என்ன சொல்றீங்க...?"

"நான் வக்கீல் இல்லை... பொலிஸ்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 100 | 110 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 80 | 90 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 100 |
| லீக்ஸ் | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 360 |
| போஞ்சி | 50 | 60 | 80 |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 | 40 |
| கீரை – 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 13

## வையாபாடல்

பேராசிரியர்
சி.பத்மநாதன்

மயில்வாகனப் புலவரின் காலத்திலேயே கூழங்கைச் சக்கரவர்த்தி பற்றிய ஐதீகம் தோன்றிவிட்டது. வையாவில் அக்கதை இடம்பெற்றுள்ளது. அந்நூல் கூழங்கைச் சக்கரவர்த்தி பற்றி மேல் வருமாறு எடுத்துரைக்கின்றது.

" அவ்விடம் இராச்சியம் பண்ணி இராசாவாக இருக்கும்படி உம்முடைய பிள்ளைகளிலே ஒரு பிள்ளை தரவேண்டுமென்றுகேட்டபரிசால் அவரும்மனம்பொருந்தித் தன்னுடைய குமாரன் கையொன்று சொத்தியாயிருந்த பிள்ளையைக் கொடுத்தார். அந்தப் பிள்ளையை யாழ்பாடி கூட்டி வந்து விசய கூழங்கைச் சக்கரவர்த்தி என்னும் பட்டமுங்கட்டி அரசு பண்ணும்படி வைத்து மணற்றிடலென்னுங் காட்டுக்கு யாழ் ப்பாணம் என்ற பட்டமுந் தரித்து தனது நாடொன்று யாவருஞ் சொல்லும் படிக்கு யாழ்பாடியிருந்தான்.

எனவே காலிங்க மாகனைப் பற்றித் தமிழ் நூல்களின் ஆசிரியர்கள் அறிந்திருந்தனரோ என்ற ஐயம் எழுகின்றது. மாகன் விசயவாகு என்ற பட்டப் பெயரைக்கொண்டிருந்தான் என்பதைச் சிங்கள நூல்கள் மூலம் அறியமுடிகின்றது. ஆயினும், தமிழ் நூல்கள் கூழங்கைச் சக்கரவர்த்தி விசயவாகு எனவும் அழைக்கப்பட்டான் என்று கூறவில்லை. கூழங்கைச் சக்கரவர்த்தி காலிங்கச் சக்கரவர்த்தியின் திரிபே என்று கொள்வா மாயினும் வையா முதலிய நூல்கள் கூறும் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி மாகன் என்று நிரூபித்தல் சிரமம்.

காலிங்க நாட்டிலிருந்து வந்த ஈழத்து முதலரசனென வரலாற்று மரபிலே குறிப்பிடப்படும் விசயனையே வையா போன்ற நூல்கள் விசய கூழங்கைச் சக்கரவத்தியெனக் குறிப்பிடுகின்றன வென்றும் ஊகிக்கலாம். யாழ்ப்பாணத்து அரசர் பற்றிய ஐதீகங்களும் விசயன் கதையும் தமிழ் நூல்களிலே கலப்புற்று வருதல் இவ்வாறான சிந்தனைக்கு இடமளிக்கின்றது.

### அடங்காப்பற்றில்வன்னியர் குடியேற்றம்

வன்னியர் பற்றி வையாபாடல் கூறுவனவற்றுட் சில வரலாற்றுண்மைகள் இடம்பெறுகின்றன. அடங்காப்பற்றை வன்னியர் கைப்பற்றியமை குறித்து மேல்வருமாறு நூல் கூறுகின்றது.

செயதுங்க வரராசசிங்கன் தன் மாமனது மகளைத் தான் மணம் முடிக்க விரும்புவதாக மதுரை மன்னிடம் அறிவிக்குமாறு தூதுவரை அனுப்பினான். தூதுவர்கள சொன்னவற்றை கேட்ட மதுரை மன்னர் 60 வாட்படை வன்னியரை அழைத்து தன் மகள் சமதூதியை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். செயதுங்கவீர வரராசசிங்கனும் இளவரசியை மணம் முடித்துவிட்டு அவளோடு வந்த வன்னியர்களை அடங்காப்பற்றினைச் சென்று ஆளுமாறும் ஆண்டுதோறும் யாழ்ப்பாண அரசனுக்கு திறை செலுத்துமாறும் பணித்தான்.

அடங்காப்பற்றை அடைந்ததும் வன்னியர் அதைக் கைப்பற்றுவதற்கு தம்மிடம் போதிய படையில்லை என்பதை உணர்ந்தார்கள். எனவே, இளஞ்சிங்க மாப்பாணன், நல்லவாகு தேவன், அத்தி மாப்பாணன் என்போரிடம் தூதுவர்களை அனுப்பி மதுரை,மருங்கூர், காரைக்கால், காஞ்சிபுரம்,திருச்சிராப்பள்ளி, துளுவை நாடு, தொண்டைமண்டலம், வடகிரிநாடு எனுமிடங்களிலிருந்து கூட்டிவரக் கூடிய வர்கள் அனைவரையும் கொண்டு வருமாறு சொல்லியனுப்பினார்கள். இதனை அறிந்ததும் தில்லை மூவாயிரவர்,திட வீரசிங்கன், குடைகாத்தான், முடிகாத்தான், நல்லவாகு, மலைநாடன், சிங்கவாகு, சோதயன், அங்கசிங்கன், கட்டைக் காலிங்கன், சொக்கநாதன், கங்கை மகன், கலைக்கோட்டு முடியோன், வீரக ச்சமணி முடியரசன், காபாலிவீரன், சேது எனும் பகுதியை ஆளுகின்ற வீரம் செறிந்த தலைவன், இளஞ்சிங்க மாப் பாணன் என்போரும், பெருமை மிக்க ஆரியவம்சத்தாரும் யாழ்ப்பாணம் வந்தார்கள்.

இவர்களிலே திடவீரசிங்கன்,கரிகட்டு மூலைப்பற்றுக்கு அதிபதியானான். இளஞ்சிங்க மாப்பாணன், இராசசிங்க மாப்பாணன், நல்லவாகு மெய்த்தேவன், கறுத்தவாகு, சிங்கமாப்பாணன் என்போர் சான்றாரையும் வலையரையும் துரத்திவிட்டு முள்ளியவளையைக் கைப்பற்றினார்கள். நீலையினார் திசையாண்டாரும் படையும் மேல் பற்றுக்கு வந்து சகரன் மகரன் என்று வேட்டுவத்தலைவர்களைக் கொன்றுவிட்டு நாட்டை ஆண்டனர். மேற்கு மூலை, கிழக்கு மூலை என்பவற்றைக் கைப்பற்றிய சிங்கவாகு பொக்கா வன்னியிலிருந்தான். சுபதிட்டா என்னும் அந்தணனும் படையுந்திரியாய் என்னுமிடத்திற்குச் சென்று நீலப்பணிக்கனைக் கொன்றுவிட்டு அந்நிலத்தை ஆண் டனர். காலிங்கன் மலையகத்தார், கன் னார் முதலியோர் கச்சாயிலே குடியிருந்தார்கள். அங்கசன் கட்டுக்குளத்திற்குச் சென்று வாழ்ந்தான். புகழ்மிக்க சிங்கவாகு திருகோணமலைக்குச் சென்றான். மாமுகன் வெருகல், தம்பலகாமம் என்பவற்றைக் கைப்பற்றி ஆளச் சென்றான். மைடன் என்போன் கொட்டியாரத்திற்கு அதிபதியானான். ஒடுக்கன், நீலன், மைலன் என்போர் முறையே துணுக்காய், இத்திமடு, நெடுங்கேணி என்னுமிடங்களுக்குச் சென்றனர்.

ஆற்றல் பொருந்திய சன்மன் நொச்சி முனையில் ஆண்டான். நாகன் புல்வெளிக்குச் செல்ல நீலையினான் வாகுதேவன் தனிக்கல்லிலிருந்தான்.

வன்னியர்கள் வந்த பின்னர் அவர்களை அடுத்து அவர்களின் மனைவிமாரும் பரிவாரங்களும் அடங்காப்பற்றை வந்தடைந்தனர். இவ்வாறு வந்தவர்களுள் மழுவீரமழவராயனும் "நாட்டையாண்ட மழவராயனும் மன்னனோடு யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். பூபால வன்னிமையும் கோபாலரும் கட்டுக்குளத்திலும் திரியாயிலும் இனிது வாழ்ந்தனர். வில்வராயன் நல்லூரிலிருந்தான். குடைகாத்தான் கொடித்தேவன், தேவராயன், கந்தவனத்தான் என்போர் செட்டிக் குளத்தின் அதிபதிகளாயினர். உத்துங்கராயன் பனங்காமத்தில் வாழ்ந்தான்.

வையாபாடலிற் பல வன்னியர்களின் பெயர்கள் வருகின்றன. அவர்கள் அடங்காப்பற்றில் கைப்பற்றிய இடங்களின் பெயர்களும் அவர்கள் குடியேறிய இடங்களின் பெயர்களும் சொல்லப்படுகின்றன. வையாபாடலிலே கூறப்படும் வன்னியர் எல்லோரும் வரலாற்று நபர்களென்று கொள்ள முடியாது.

மேலும் அவர்கள் அனைவரும் ஒரே காலத்தில் ஈழத்திற்கு வந்தார்களென்றும் சொல்லிவிடமுடியாது.ஆயினும் அவர்களிற் பலர் தென்னகத்திலிருந்து ஈழத்திற்கு வந்து வன்னிப் பிரதேசங்கள் பலவற்றைக் கைப்பற்றி ஆண்டதை ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகவே கருதவேண்டும். அவர்கள் இன்ன காலகட்டத்தில் ஈழத்திற்கு வந்தார்களென்பதை வையாபாடல் தெளிவான முறையிலே கூறவில்லை.

எனவே ஈழ நாட்டு வரலாற்றையும் தென்னிந்திய வரலாற்றையும் ஒருங்கே ஒப்புநோக்கி ஆராய்வதன் மூலமும் நூலிலுள்ள அகச் சான்றுகளை நோக்குவதன் மூலமும் ஓரளவிற்கு வன்னியர்கள் வந்த காலத்தை நிர்ணயிக்கலாம்.

வன்னியரின் வருகைபற்றி நூல்தரும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியவொன்றாக அமையவில்லை. மதுரை மன்னனின் இளவரசியோடு அவர்கள் வந்தார்கள் என்பது பதினெண் குடிகளைச் சேர்ந்த மக்களைக் கூட்டி வந்தார்கள் என்பதும் ஓரளவிற்கு விசயன் மதுரை இளவரசியை மணந்தமை பற்றி மகாவம்சம் கூறும் கதையை ஒத்திருக்கின் றன.

எனினும், மதுரை மன்னனின் தூண்டுதலினாலே வன்னியர் வந்தனர் என்ற மரபும் செயதுங்க வீரவராச சிங்கன் என்ற முதல் அரசன் காலத்தில் வந்தனர் என்ற ஐதீகமும் ஆராய்வதற்குரியன.(தொடரும்)

# பொன்சேகாவுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக கைதானோர் அடிப்படை உரிமைமீறல் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக சந்தேகத்தின் பேரில் கைதான ஓய்வுபெற்ற 16 இராணுவ உத்தியோகத்தர்களின் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டன.

பிரதம நீதியரசர் அசோக என் டி சில்வா தலைமையிலான நீதியரசர்கள் பி.எ.ரத்னாயக்க மற்றும் எஸ்.எ.இமாம் ஆகியோர் கொண்ட குழு முன்னிலையில் இம் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களைச் சந்திப்பதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு 16 மனுதாரர்கள் சார்பாகவும் ஆஜரான சட்டத்தரணிகள் உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம் மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்றம் சட்டத்தரணிகள் சந்தேக நபர்களைச் சந்திப்பதற்கு இடமளிக்குமாறு பிரதிவாதிகளிற்கு உத்தரவிட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்களின் பேரில் இதற்கு முன்னர் கைதான ஓய்வுபெற்ற ஏழு இராணுவ உத்தியோகத்தர்களுக்கும் உரிய அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்ட போது அவர்கள் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-14)

# சீரற்ற பஸ்சேவை காரணமாக அசௌகரியத்துக்குள்ளாகும் மக்கள்

பருத்தித்துறையில் இருந்து திருநெல்வேலி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு காலை 7 மணிக்கும், 7.30 மணிக்கும் பயணம்செய்யும் 764 இலக்க இரண்டு பஸ்களும் சீரற்ற போக்குவரத்து சேவையை மேற்கொள்வதால் குறித்த பஸ்களில் பயணம் செய்யும் பொது மக்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதில் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரே பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும் இவ் இரண்டு பஸ்களில் சில நேரங்கள் ஒரு பஸ் மட்டும் சேவையில் ஈடுபடுவதால் பயணிகளை ஏற்றமுடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால்மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் பயணம் செய்யும் பொது மக்களின் நலனைக்கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (6-4-ப)

# அழுகிய தேங்காய்கள் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் விசனம்

வலி.மேற்கு சந்தையில் சிலவியாபாரிகள் அழுகிய தேங்காய்கள் மற்றும் மரக்கறி வகைகளை விற்பனை செய்துவருவதாகப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தென்பகுதிகளில் இருந்து தேங்காய்களும் மரக்கறி வகைகளும் தாராளமாக எடுத்து வரப்பகின்றன. இவ்வாறு எடுத்து வரப்படும் தேங்காய்களே அழுகிய நிலையில் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு எடுத்து வந்து விற்பனை செய்யப்படும் தேங்காய்கள் கண்பார்வைக்கு நன்றாக இருப்பினும் அவற்றை உடைத்து உள்ளே பார்க்கின்றபோது அழுகியநிலையில் இருப்பதாகவும் இதனால் அவற்றை மீள ஒப்படைத்து பணத்தை கேட்கும்போது வியாபாரிகள் பாவனையாளர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுவதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (6-49)



தற்போது நிலவும் ஆசிரியர் பிரச்சினைகளை விளக்கும் மனுவொன்றின் பிரதிகளை வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தினர் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரிடம் கையளித்து கலந்துரையாடியுள்ளனர். இந் நிகழ்வைப் படத்தில் காணலாம்.

# திபெத் விவகாரத்தில் அமெரிக்கா இரட்டை வேடம் போடுகின்றது

## சீனா குற்றச்சாட்டு

(பீஜிங்)

திபெத் விவகாரத்தில் அமெரிக்கா இரட்டை வேடம் போடுவதாக சீனா குற்றம் சுமத்தியுள்ளது.

தலாய்லாமாவை ஒபாமா சந்தித்துப் பேசியதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள சீனா இதன் மூலம் அமெரிக்காவின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இரு தரப்பு உறவை வலுப்படுத்த இரு நாடுகளும் சமீபகாலமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்நிலையில் தலாய்லாமாவைச் சந்தித்துப் பேசியதன் மூலம் இரு தரப்பு உறவை அமெரிக்கா உதாசீனப்படுத்தியுள்ளது என்று சீன வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் மா. ஷாவோஷு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஒருங்கிணைந்த பகுதிதான் திபெத். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. இது நாட்டின் இறையாண்மை மற்றும் மக்களின் உணர்வோடு தொடர்புடைய விவகாரம். இதனால் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள தலாய்லாமாவை ஒபாமா சந்தித்துப் பேசியதன் மூலம் சீனாவின் உள்விவகாரத்தில் ஈடுபட்டதுடன் ஒட்டுமொத்த சீன மக்களின் உணர்வுகளையும் புண்படுத்தியுள்ளது அமெரிக்கா.

எதிர்வரும் காலத்திலும் அமெரிக்கா இது போன்ற செயலில் ஈடுபடக்கூடாது. இரு தரப்பு உறவு சுமுகமாக நீடிக்க உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றார். (6)



அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை திபெத்தின் புத்தமதத் தலைவர் தலாய்லாமா சந்தித்துக் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# திபெத்துக்கு சுயாட்சி வழங்க வேண்டும்

## தலாய்லாமா வலியுறுத்து

(வோஷிங்டன்)

திபெத்துக்கு சுயாட்சி வழங்கப்படுவது அவசியம் என்று திபெத்தின் புத்தமதத் தலைவர் தலாய்லாமா தெரிவித்துள்ளார். திபெத் விவகாரத்தில் சீனா ஒரே போக்கான அணுகுமுறையைக் கையாளுகிறது. இப்போக்கை கைவிட்டு நியாயத்தை உணர்ந்து அதற்கேற்றாற்போல் செயற்பட சீனா முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஒரு பிரச்சினையை ஒரே கோணத்தில் பிடிவாதப் போக்குடன் அணுகுவதால் அப்பிரச்சினையின் உண்மை நிலையை அறிய முடியாது. அதற்குத் தீர்வு காணுவதும் இயலாத காரியம். ஒரு பிரச்சினையைப் பல கோணத்தில் திறந்த மனதுடன் அலசி ஆராயும்போதுதான் உண்மை புலப்படும். அதற்கான தீர்வையும் காண முடியும் என்றார்.


சீனாவின் சில நடவடிக்கை சிறுபிள்ளைத்தனமாக இருப்பதால் சிலர் குற்றம் சுமத்துகின்றனர் என்று தெரிவித்துள்ள அவர் அவர்களை அப்படி நினைப்பதற்கு சீனாவின் ஒரே போக்கான அணுகுமுறைதான் காரணம் என்றும் தெரிவித்தார்.

ஆயிரம் ஆண்டுகள் பாரம்பரியமிக்க தனித்துவம் வாய்ந்த கலாசார சிறப்புடைய நாடு திபெத். சீன ஆக்கிரமிப்பால் திபெத்தின் கலாசாரம் மெல்ல மெல்ல அழிந்து வருகிறது. இதைத் தடுத்து மேன்மையான கலாசாரத்தையும் தனித்துவம் வாய்ந்த மதம், மொழி, புராதன சின்னங்களையும் காப்பாற்ற வேண்டியுள்ளது. தற்போதைய நிலையில் இது சாத்தியமில்லை. திபெத்துக்கு சுயாட்சி வழங்கினால் மட்டுமே சாத்தியமாகும் என்று தலாய்லாமா தெரிவித்தார்.

வல்லரசு என்ற இலக்கை அடைவதற்கு முனைந்து வரும் சீனா நிதி நெறிக்கு முக்கியத்துவம் கொடுத்தும் அடக்குமுறை குணத்தைக் கைவிட்டும் நடக்க வேண்டும். குறிப்பாக பத்திரிகை சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும். பத்திரிகைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகளை நான் கடுமையாக எதிர்க்கிறேன் என்றார். (6)

### வேலை பறிபோனதால் விரக்தி

# வரித்துறை அலுவலகம் மீது விமானத்தை மோதிய கணனிப் பொறியியலாளர்



வெறுப்படைந்த கணனிப் பொறியியலாளர் ஒருவர் சிறிய ரக விமானத்தை ஓட்டிச் சென்று கட்டடத் தின் மீது மோதி தகர்த்துள்ளார். அமெரிக்கா வின் ஹூஸ்டன் நகரில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 13 பேர் காயமடைந்தனர். விமானத்தை ஓட்டிச் சென்ற ஜோஸப் ஆண்ரூஸ் டாக்கும் இதில் இறந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

இங்குள்ள 7 மாடி வருவாய்த்துறை கட்டடத்தின் மீது சிறிய ரக விமானம் மோதியதில் அதன் மூன்றாவது மற்றும் நான்காவது தளங்கள் முற்றிலும் சேதமடைந்தன.


2001ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் இருந்த 101 தளங்களைக் கொண்ட இரட்டை வர்த்தக மையக் கட்டடம் அல்கொய்தா தீவிரவாதிகளால் விமானம் மூலம் தகர்க்கப்பட்டது. இதேபாணியில் தற்போது விமானம் மோதி கட்டடம் தகர்க்கப்பட்டுள்ளமையானது அமெரிக்கர்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தீவிரவாத தாக்குதல் சம்பவம் அல்ல என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் நடவடிக்கையாக இத்தகைய துணிகர முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது 200 வருமான வரித்துறை அதிகாரிகள் பணியில் இருந்தனர். இவர்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு வெளியேறினர். கட்டடம் முழுவதும் தீ பரவியதில் ஒருவர் உயிரிழந் தார். 13 பேர் காயங்களுடன் தப்பினர்.

53 வயதான ஜோசப் ஆண்ட்ரூ ஸ்டாக், பயிற்சி விமானமான பைபர் டகோடா ரக விமானத்தில் புறப்பட்டு இந்தக் கட்டடத்தின் மீது மோதியதாகத் தெரிகிறது. இது திட்டமிட்ட தனிநபர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை. இதற்கும் தீவிரவாத சதிச் செயலுக்கும் தொடர்பில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வருமான வரித்துறை அதிகாரிகள் மீதான காழ்ப்புணர்ச்சியில் இத்தகைய தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிகிறது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவ விமானங்கள் அப்பகுதியைச் சுற்றிவளைத்தன.

இதனிடையே விமானத்தை ஓட்டிய ஸ்டாக் அரசுக்கு எதிராக வெளியிட்ட கருத்துகளை அவரது இணையத்தளத்திலிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வருமான வரித்துறை அதிகாரிகளுக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஆகியன இந்த சம்பவத்தைச் செய்யத் தூண்டியுள்ளதாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (6)



இயற்கைப் பேரழிவுகளால் அடிக்கடி பாதிக்கப்படும் இந்தோனேசியாவில் தற்போது தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மேற்கு ஜாவாவில் பாண்டுங் நகர் மழை வெள்ளத்தால் மூழ்கியுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதியிலிருந்து மக்கள் வெளியேறினர்.

# பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தையில் மும்பைத் தாக்குதல் விவகாரமும் இடம்பெறும்

## அமைச்சர் சிதம்பரம்

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையின்போது மும்பைத் தாக்குதல் விசாரணை குறித்தும் பேசப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார்.

இந்திய வெளியுறவு செயலர் நிரூபமா ராவும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பஷீரும் பங்குபற்றும் இப்பேச்சுவார்த்தையின்போது பயங்கரவாதம் குறித்துப் பேசப்படுமென இந்திய அரசு தரப்பில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறியதாவது; வெளியுறவு செயலர்கள் பேச்சுவார்த்தையில் என்னென்ன பிரச்சினைகள் பேசப்படவுள்ளன என்பது பற்றி இந்திய அதிகாரிகள் முடிவு செய்வர்.



அதில் நிலுவையிலுள்ள பிரச்சினையான மும்பைத் தாக்குதல் விசாரணை விவகாரமும் இடம்பெறும். அமெரிக்காவில் கைதான டேவிட் ஹெட் லியை விசாரிக்க சட்ட ரீதியாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை உள்துறை அமைச்சு ஆரம்பிக்கும் என்றார். (6)

### பாகிஸ்தானில் ஏற்பட்ட பனிச்சரிவில்

# ஒரு கிராமமே பூமிக்குள் புதைந்து 60 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் இருந்து 200 கி. மீற்றர் தூரத்தில் கோஹிஸ்தான் மாவட்டம் உள்ளது. அப்பகுதியிலுள்ள காண்டியா பள்ளத்தாக்கு பனி பிரதேசமாகும்.

அங்கு பனி மலைகளால் சூழப்பட்டுள்ள பகாரோ செரை என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் திடீரெனப் பனிப்பாறைகளில் சரிவு ஏற்பட்டது. இதனால் அந்த கிராமமே பூமிக்குள் புதைந்தது. அங்கிருந்த கட்டிடங்கள் மற்றும் வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. வீதிகளும் சேதமடைந்தன.

தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் தகவல் கிடைத்தவுடன் மீட்பு படையினரால் விரைவாக செல்ல முடியவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

இச்சம்பவத்தில் 60 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரும் எனவும் அஞ்சப்படுகிறது. பனிப்பாறை மற்றும் மண் சரிவுக்குள் பலர் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும் அங்கு கடுமையான பனிப்பொழிவு உள்ளதாகவும் பெஷாவரில் இருந்து உணவுப் பொருட்களுடன் சென்ற ஹெலிகொப்டரால் அங்கு தரையிறங்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# தாயகக் கோட்பாடுகளை முன்வைத்தாலே தமிழ்மக்கள் கூட்டமைப்பினரை ஏற்றுக்கொள்வர்

## ஜெயானந்தமூர்த்தி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் அடிப் படைக் கொள்கைகளான தாயகம், தேசியம், சுய நிர்ணய உரிமை, தன்னாட்சி, இறைமை என்ற கோட்பாடுகளை முன்வைத்து த.தே. கூட்டமைப்பு போட்டியிட்டால் மாத்திரமே தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்குறித்த தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாட்டை முன்வைத்தே போட்டியிட்டது.

இதன் மூலம் தமிழ் மக்கள் தமிழீழக் கொள்கைக்கு ஆணை வழங்கியிருந்தனர். தற்போது தற்காலிகமாக ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டுள்ளது. இந்த வேளையில் எமது அரசியல் ரீதியான செயற்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. இதைக் கூட்டமைப்பு நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் சம்பவத்திற்குப் பின்னர் எல்லாம் முடிந்துவிட்டதாக கூட்டமைப்பில் உள்ள சிலர் நினைக்கின்றனர். அதனால் தாயகக் கோட்பாட்டைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கம் பற்றி கதைக்க முற்பட்டுள்ளனர்.

எமது தேசியப் போராட்டம் பல அர்ப்பணிப்புகள், தியாகம் என்பனவற்றிலிருந்து கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதைக் கொச்சைப்படுத்தும் வகையில் எவரும் நடந்துகொள்ள முயலக் கூடாது. தற்போது சுயநல அரசியலை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை திசை திருப்பும் வேலை அக்கட்சியில் உள்ள சிலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரசியல் ரீதியாக சில விட்டுக் கொடுப்புகளைச் செய்வது அரசியல் இராஜதந்திரம் என விளக்கம் கூற இவர்கள் முற்படலாம். அதற்காகவே எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்பதை முன்வைக்காமல் தேர்தல் முடிந்து பதவிக்கு வந்த பின்னர் இது பற்றிப் பேசலாம் என கூட்டமைப்பு பிரதிநிதிகள் மக்கள் முன்கூற முற்படுவது தமது பதவியைப் பெறுவதற்கே தவிர வேறு எதற்காகவும் அல்ல என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இது எமது தேசியத்திற்கும் கடந்த 30 வருடகாலமாக உயிரைக் கொடுத்து போராடிய மாவீரர்களுக்கும் எமது இனத்திற்கும் செய்யும் துரோகமாகும். அவ்வாறான நிலை ஏற்பட்டால் வரலாறு இவர்களை என்றுமே மன்னிக்கப் போவதில்லை என்று ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அது தமிழீழக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட கட்டமைப்பு. அதனை ஏற்றுக்கொண்டே அதில் இணைந்துள்ள தமிழ் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கடந்த காலங்களில் அரசியல் நடத்தி வந்தனர்.

ஆனால் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழக் கோரிக்கையை என்றுமே முன் வைக்கவில்லை என கூறுவது தமிழ் மக்களை முட்டாள்களாக்கும் செயலாகும். அது மாத்திரமின்றி என்ன கொள்கைக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அதன் கொள்கையை கொச்சைப்படுத்தும் செயலாகவுமே பார்க்க வேண்டியுள்ளது.

இந்தியாவின் நலனுக்காக இவர்கள் செயற்படாமல் தமிழ் மக்களின் நலனுக்காக செயற்பட வேண்டும். இதுவே ஆரோக்கியமானதாகவும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என்று தெரிவித்துள்ள ஜெயானந்தமூர்த்தி,

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுப்பதில்லை என தெரிவித்துள்ளது. அவர்கள் யாருக்கு இடம்கொடுப்பதில்லை என்பதை பார்த்தால் அதிகமானோர் தேசியத்தோடு கொள்கையை இறுதிவரை விட்டுக் கொடுக்காமல் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தவர்களே புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு மாறாக கடந்த காலங்களில் தேசியத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தவர்களுக்கும் போராட்டத்தை கொச்சைப்படுத்தி வியாக்கியானம் பேசியவர்களுக்கும் மாற்றுக் கொள்கையுடன் இருந்து செயற்பட்டவர்களுக்கும் இடம் கொடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே நான் பார்க்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு மாறாக இம்முறை தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்க முடியாது. கடந்த 2004 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒட்டியதாக அது அமைய வேண்டும். இல்லாவிட்டால் அதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அத்துடன் மாறான கொள்கையை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பை இவர்கள் கையில் எடுக்கமுடியாது. கூட்டமைப்பு என்பது எந்த விதமான குப்பை கூழங்களும் இல்லாத ஒரு சுத்தமான திடல் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் புலம்பெயர் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் எத்தகைய நடவடிக்கைகளும் பாரிய பின்னடைவைச் சந்திக்கும். ஏனெனில் புலம் பெயர் மக்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திலும் சரி தமிழர்களின் அரசியல் நகர்வுகளிலும் சரி ஒரு பின்புலமாக உள்ளனர் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என ஜெயானந்தமூர்த்தி மேலும் தெரிவித்துள்ளார். (6)

# இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சுயதொழில் ஓய்வூதியம் பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்த பயனாளிகளில் 2010 ஆம் ஆண்டில் 60 வயதினைப் பூர்த்திசெய்யும் பயனாளிகளுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இவ் ஓய்வூதியம் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளின் விபரம் வருமாறு, செல்லத்துரை தர்மலிங்கம் (கோண்டாவில்), சுப்பன் திருநாவுக்கரசு (நீர்வேலி), மயில்வாகனம் சண்முகநாதன் (இணுவில்), கந்தையா யோகரட்ணம் (கரவெட்டி தெற்கு), நல்லையா நாகராசா(சித்தன்கேணி), முருகேசு சின்ன ராசா (மல்லாகம்), ஆசைப்பிள்ளை திருச் செல்வம்(அல்வாய்), கணபதி தவராசா (மானிப்பாய்), சதாசிவம் ஸ்ரீஸ்கந்தராசா (பருத்தித்துறை), கங்காதேவி வேதநாயகம் (இணுவில்), தம்பிப்பிள்ளை யோகேந்திரன் (மானிப்பாய்), நிமலநாதன் இராசமல்லிகா தேவி (சுன்னாகம்), வேலாயுதம் தில்லை நடராசா( மூர்த்திவளவு), செல்லத்துரை சதாசிவம்(கொடிகாமம்), மயில்வாகனம் பசுபதி (பருத்தித்துறை), அன்னராணி இரகு நாதன் (கொக்குவில்), இராசு துரைசிங்கம் (சுதுமலை கிழக்கு), கந்தையா இராஜரட்ணம் கணேசலிங்கம் (சங்கானை), கார்த்திகேசக்குருக்கள் சதானந்தசர்மா (வண்ணார்பண்ணை), சண்முகம் பூமாதேவி(சண்டிலிப்பாய்), இராமலிங்கம் மயில்வாகனம்(பருத்தித்துறை), நாகராணி கந்தசாமி (மூளாய்), மாணிக்கம் தவக்குமார் (சித்தன்கேணி), அப்புத்துரை சிவஞானம்(சித்தன்கேணி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான ஓய்வூதியப் படிவம் இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள கிராமிய வங்கியில் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி பி.பிரதீபன் தெரிவித்துள்ளார். (6-4-30)

# ஆஸியில் அடைக்கலம் கோரிய மீனவர்களில் இறுதியானவரும் நாடு கடத்தப்பட்டுள்ளார்

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அடைக்கலம் கோரிய இலங்கை மீனவர்களில் இறுதியானவரும் அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டுள்ளார். மெரில் பெர்னாண்டோ என்பவரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டவராவார்.

11 பேருடன் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி இவர் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்தார்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இந்த 11 பேரில் இருவர் சுயமாகவே நாடு திரும்பிவிட்டனர்.

ஏனையோர் அவுஸ்திரேலிய நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நாடு கடத்தப்பட்டனர்.

இந்த நிலையில் தமது குடியேறல் மறுப்புக்காக மேன்முறையீடு செய்த மெரில் பெர்னாண்டோவின் மனுவையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததன் அடிப்படையிலேயே அவர் நாடு கடத்தப்பட்டுள்ளார். (6)

# நுவரெலியா , பதுளை மாவட்டங்களில் ம.ம.மு.தனித்துப் போட்டியிடத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது மலையக மக்கள் முன்னணி கட்சி முக்கியமான இரண்டு மாவட்டங்களில் மண்வெட்டி சின்னத்தில் தனித்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது. நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் மலையக மக்கள் முன்னணி தனித்து போட்டியிட உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் எஸ். விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் புதிய தலைவி சாந்தி சந்திரசேகரனின் தலைமையில் இன்று நடைபெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் இந்தத் தீர்மானம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளதாக தெரிகிறது.

மேலும் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் மலையக மக்கள் முன்னணி வேட்பாளரை நிறுத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக தகவல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாகத் திகழும் அம்பாறை மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான முஸ்தீபு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மு. காங்கிரஸின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி இந்த மாவட்டத்தின் மூன்று ஆசனங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் தக்கவைத்துக்கொள்ளும் நடவடிக்கையாக இது அமையும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முஸ்லிம் காங்கிரஸுடன் ஐ.தே.க. இணைந்திருந்தமையால் ஒரு இலட்சத்து 53ஆயிரத்து 105 வாக்குகளை சரத்பொன்சேகா பெற முடிந்தது எனினும் பொதுத் தேர்தலில் ஒரு கட்சியில் 10 பேர் இம் மாவட்டத்தில் போட்டியிடுவதால் இது மேலும் அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் யானைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நிந்தவூர் பைசல் காஸீம், கல்முனை ஹரீஸ் ஆகியோரின் பெயர்கள் முன் மொழியப்பட்டுள்ளதாகவும் நம்பகமாகத் தெரிகிறது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மாகாண சபை உறுப்பினர்களான தயாகமகே மற்றும் சந்திரதாச கலப்பதியும் இக்கட்சியின் முஸ்லிம்களின் சார்பில் கல்முனையைச் சேர்ந்த மன்ஸுர் ரஹ்மான், சம்மாந்துறை ஹஸலியும், தமிழ் மக்கள் சார்பில் இருவரை நியமிக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி உயர்பீடம் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (6)

### இராணுவ சூழ்ச்சித்திட்டம் குறித்து

# ரணிலின் பாதுகாப்பு அதிகாரிகளிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

இராணுவ சூழ்ச்சித் திட்டம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினது பாதுகாப்பு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜெனரல் சரத் பொன்சேகா தரப்பினர் அரசாங்கத்தை கவிழ்க்கும் சூழ்ச்சித் திட்டம் தீட்டியதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியிருந்தது.

மேலும் இந்த சூழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரிகளிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தியுள்ளதாகவும் இராணுவ சூழ்ச்சித் திட்டத்துடன் குறித்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளதா என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (6)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### உலகமே காதல்!

மண்ணுக்கும் விண்ணுக்கும் காதல்
நிலவுக்கும் பெண்ணுக்கும் காதல்
அன்புக்கும் ஆசைக்கும் காதல்
மானுக்கும் விழிக்கும் காதல்
உலகமே காதல்

பாசமும் பற்றும் காதல்
அறிவுக்கும் ஆற்றலுக்கும் காதல்
பண்பிற்கும் வாஞ்சைக்கும் காதல்
தேனிற்கும் வண்டுக்கும் காதல்
உலகமே காதல்

குழந்தைக்கும் அன்னைக்கும் காதல்
தியாகிக்கும் தேசத்திற்கும் காதல்
கற்பிற்கும் பெண்ணுக்கும் காதல்
ஆசைக்கும் வீரத்திற்கும் காதல்
காதலர் தினமும் விசித்திரக் காதல்
உலகமே காதல்! காதல்! காதல்!

ந.பிறீபன்
கல்வயல்

### சிறைவாசம்

யுத்தம் முடிந்தும்
பத்திரமாய் இருக்கின்றேன் – அம்மா
இப்போதும் சிறைக்குள்
மூடிமறைத்த உண்மைகளும்
மூட்டையான வேதனைகளும்
சொல்லத்தெரியவில்லை...
சொல்லியழ யாருமில்லை
அம்மா – நீ இருந்தும்
அனாதையாகிவிட்டேன்
இருபது வருட சிறைவாசத்துள்

பூலக்ஷி
கல்லுவம்

### அரசியல்

எப்போதும் எரியும்
சுடலைக்குள் இருந்து
மரிக்கப்பட்ட
ஒரு சொட்டு ஹைகூவாய்
உம் கோடிபுரத்து
குப்பைமேட்டில் – என்
கண்ணீரின் வெள்ளம்...

சா. ரமேஸ்குமார்
மீசாலை கிழக்கு.

### ஏக்கம்

நான்கு காலில் நான்
தவழ்ந்து முத்தமிட்ட - என்
தேசத்து மண்ணின்
காவலாய் முள்வேலிகளும்
தலையிழந்த பனைகளும் - நானோ
பற்றைகளுக்கு நடுவே
ஒரு குடிசைக்குள்
தூக்கத்திற்கு ஏங்கியவளாய்

லோ.சரண்யா
கொக்குவில் மேற்கு

### காத்திருப்பு

உனக்காகக் காத்திருந்த
ஒவ்வொரு மணித்துளியும்
நகர மறுத்த
நாட்காலியாய்...
கடந்த காலத்தில்
கால்வைக்கும் போது
நியூட்டனின் மூன்றாம்
விதியைக் கூட
நிராகரிக்கத்துடிக்கும் இருதயம்

என் கண்ணீர்த்துளிகளை
கவிதையாக்கினேன்...
எதைக்கேட்டாலும்
மொனத்தைப்பரிசளிக்கிறாயே
மௌனத்தைக்கேட்டால்
எதைப்பரிசளிப்பாய்

தி.கோபினாத்
மட்டுவில்

### பெருமைகொள் பெண்ணே

குடும்பம் என்ற
கோயிலில்
குத்துவிளக்காய்
ஒளிர்ந்தவர்கள்
அணையும் காலம்
வந்தபோது
அணைக்கும் கரங்கள் இருந்தும்
அநாதைகளாகக் கையேந்தி
அவஸ்தைப்படுவதைப்பார்த்து
பெண் இனம்
பெருமைகொள்ளட்டும்
ஏனெனில்
ஒரு ஆணுக்குப்பின்பும்
ஒரு பெண் இருக்கிறாள்

நிலாமதி
ந.பு.நிலையம் அல்லவரை

### ஏனிந்த மாற்றம்

என் காதலின் நீ தான் என்று
எனக்கு உன்னைக் காட்டிய
அந்தக் கடவுள் - என்
வருங்காலக் கணவன்
இவன் தானென்று - ஏன்?
இன்னொருவனைக் காட்டினான்?

க.அருவி
புத்தூர் வடக்கு

### இமயம் தொட...



முயற்சி செய்...
முத்துக்குளிக்க-நீ
முடிவெடுத்தால்
முயன்றுதான் ஆகவேண்டும்
முயன்று முயன்றுபார்
முன்னேற்றத்தின்
முதல்படி
முயற்சியே!

மாவை. நா.கஜேந்திரா

### எனக்காய் எதுவும் இல்லை

எக்கணத்திலும்
மறக்கமுடியாமல்
தவிக்கிறது என் மனது
என் காதலியின் கலியாணம்
என் நண்பனின் மரணம்
என் தேசத்திலிருந்தான
புலம்பெயர்வு

நான் இன்று
வேற்றுத்தேசத்தில்
ஓர் அநாதையாய்
எனக்காய் இப்போ
எதுவுமில்லை
ஒரு தேசம்!
ஒரு நண்பன்!
ஒரு காதலி!



~ கலியுகன் ~



# மௌனத்தின் தேடல் - 07

### மனிதம்

மனிதனின் ஆரோக்கியத்திற்கு
அசுத்தமான சூழல்தனை
சுத்தப்படுத்துகிறீரோ?
ஒ...மனிதம் இன்னும்
உலகில் வாழ்கிறதே!

சிவாயநம பகீஷன்
நாகர்கோவில்

### நலமதனை செய்கின்றோம்

நோயும் நொடியும்
நெடுந்தூரம் செல்வதற்காய்
நாளும்பெழுதும் நாம்
நற்பணியைச் செய்கின்றோம்
நலமதனை செய்கின்றோம்

கவிஞர் சு.க.சிந்துதாசன்

### சூழற் சுகாதாரம்

வாழும் சூழல் மாசுபட்டால்
வாழ்வே நோய்மயமாகும்
உணர்வீர் மக்களே!
விரைவீர் சூழல்காக்க!
சூழற் சுகாதாரமே
வாழ்வின் ஆதாரம்

சு.ஜெயசீலன்
ஹாட்லிக் கல்லூரி

### உயிர்கொல்லி

துணிந்து விட்டனர்
உயிர்கொல்லியை
விரட்டியடிப்பதற்கு
இனியும் எம் உறவை
இழப்பதற்குத் தயாரில்லை
என்பதால்

சி.நிர்மலா
தொண்டைமானாறு

### ஒன்றுகூடி ஒழித்திடுவோம்

இருக்கும் இடம்தேடி
உருக்கமுடன் ஓடிவந்து
காதோடு
நெருக்கமுடன் ஏதோ மொழிபேசி
நொடிப்பொழுதில்
வருத்தமுடன் உடல்வலிக்க
ஊசிவாயால்
கடித்தவுடன் உதிரம்தன்னில்
காலனாம் டெங்குதனைக்
கலந்திடச் செய்து நாம்
கலக்கமுடன் கணப்பொழுதும்
வாழாமல்
நினைத்தவுடன் அழித்திடுவோம்
ஊருடன் ஒன்றுகூடி
ஒழித்திடுவோம்

சந்நிதி த.கயானந்தி

### சுத்தம்

தினம் தினம் சுத்தம் செய்யாது
திட்டிகள் சேரவிட்டு
நுளம்புகளை வளர்த்துவிட்டு
உயிர்ப்பலியும் கொடுத்துவிட்டு
உணர்வுகளில் உண்மை உறைக்க
சுத்தம் செய்கின்றோம் ஆறுதலாய்...

வ.நிலானியா
வல்வெட்டித்துறை

நினைவுக்காய் வேண்டாம்
ஒருநாள்
டெங்குக்காய் மட்டும் வேண்டாம்
இந்நாள்
தினமும் சுத்தம் செய்வோம்
இன்புற்று வாழ்வோம்
என்றும்...

சாள்ஸ் திருநெல்வேலி

### சுத்தம் செய்

டெங்கெனும் அரக்கன்
மிக அருகில் வந்து – எம்
உறவுகளின் உயிர்களையும்
குடித்துவிட்டான்...
இனியாவது விழித்தெழுங்கள்
சுகவாழ்வைத்தேடும்
உள்ளங்களாக...
சிரமதானம் எனும் வழியில்
தொடரட்டும் பயணம்
ஒழியுங்கள் டெங்கை...

ந.சதீஸ்
கந்தர்மடம்





### அன்பு

கடலில் என் அன்பை
எழுதினேன்
அதை கடலலை
அடித்துவிட்டது
காகிதத்தில் என்
அன்பை எழுதினேன்
அதை கறையான்
அரித்துவிட்டது
என் மனதில்
எழுதியிருக்கிறேன்
அன்பை
யாரால் அழித்திட முடியும்

சீ.ஜெகனி
கட்டுடை

# மௌனத்தின் தேடல்- 08



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 26.02.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

### மன ஓட்டறை

வாதம் விவாதம் பிரதேசவாதம்!
வகுப்பு வாதம்!!!
எங்கேதான் இல்லை
உளறினார் மீளார்
அறியாதார் உணரார்
ஒவ்வோர் சொல்லும் செயலும்
ஒட்டறை தட்டும்
விளக்குமாற்று ஈர்க்குகளாக
மனதை பிராண்டுகின்றன
கேட்டுக் கேட்டு மனதில்
ஒட்டறை படிந்துவிட்டது
ஒட்டறை தட்டினாலும்
முழுதுமாய் அகற்றினாலும்
சுவர் கறுத்தபடியேதான் இருக்கிறது
எந்ததுடைப்பம்
இதைத் துடைக்கும்...?

புலோலியூர் புதுக்கவிஞன்

# மத்திய வங்கி ஊழியர்களுக்கு தமிழ்; வளர்ச்சிக்கு அவசியம் எனத் தெரிவிப்பு



வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான மத்திய வங்கியின் கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கும் ,நாட்டில் இன ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புவதற்கும் உதவியாக மத்திய வங்கி ஊழியர்களுக்கு தமிழ் மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதன்படி தமிழ் மொழியில் அதன் அங்கத்தவர்கள் தேர்ச்சியைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு, அரச கரும மொழித் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து தமிழ் மொழியில் வங்கி அலுவலர்களின் திறனை அதிகரிப்பதற்காக இத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும்,

இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் அரச மொழிக் கொள்கையைப் பின்பற்றி அதன் அலுவலர்கள் கடகைளை நிறைவேற்றுவதற்கு தயார்ப்படுத்துவதாகும். இத் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் சகல தரங்களிலுமுள்ள 200 இற்கும் கூடுதலான அலுவலர்கள் அதிக அக்கறையுடன் பங்கேற்று வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.





# யாழ்.,வவுனியா மற்றும் மன்னாரில் சுற்றுலா கட்டிடத் தொகுதி அமைப்பு

## ஜனவரியில் வரவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,வவுனியா மற்றும் மன்னாரில் 3 பூரணமான சுற்றுலாத் தொகுதிகள் அமைக்கும் பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்,இது 2016ஆம் ஆண்டு 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவேண்டும் என்ற இலக்குக்கு வலுச் சேர்க்கும் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜா கொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை,தற்போதைய அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வரவால் மேலும் 7ஆயிரம் அறைகள் தேவைப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.கலைச்செல்வம் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,கல்ப்பிட்டியில் அண்ணளவாக 5 ஆயிரம் ஏக்கர் பரப்புக் கொண்ட 13 தீவுகளை சுற்றுலா மையமாக்கவுள்ளோம். இத் திட்டம் பூர்த்தியாகின் 15 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிட்டும்.மேலதிகமாக 3ஆயிரம் அறை வசதியும் கிடைக்கும்.

இதேவேளை 2-வது திட்டமாக பாசிக்குடாப் பகுதியில் 13 ஹோட்டல் திட்டம் உள்ளது.இது ஆயிரம் அறை வசதியை அதிகரிக்கும். இதனால் 5 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பைப் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது திட்டம் குச்சவெளியில் மேற்கொள்ளப்படுகிறது.இத் திட்டங்களை 2 ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது .இதனை கருத்தில் கொண்டு வீதி,மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் உட்பட்ட அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படும் என கலைச்செல்வம் மேலும் தெரிவித்தார்.


சிகிரியாவில்...

## விமானப் பணியாளரின் உடை மாறுகிறது

# சிறிலங்கன் பங்கை வாங்க எமிரேட்சுடன் இலங்கை பேச்சு




(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் டுபாயைத் தளமாகக் கொண்ட எமிரேட்ஸ் நிறுவனத்திடம் இருந்து ,எமிரேட்ஸ் வசமுள்ள சிறிலங்கன் எயார்லைன்ஸ் பங்குகளை வாங்கும் முயற்சியில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது என சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் பங்குகளை மீளவும் வாங்க முடிபு செய்துள்ளது. அவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இது குறித்து எமிரேட்ஸ் நிறுவனம் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவிக்கையில்,இலங்கை தனது பங்கை அதிகரிக்க முயற்சிப்பது உண்மையே எனத் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு விமான நிறுவனமான எமிரேட்ஸ் ,சிறிலங்கன் எயார்லைன்ஸின் 40 வீதமான பங்குகளை 70 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு 1998 ஆம் ஆண்டு வாங்கியது.அதன் தற்போதைய பங்கு 43.6வீதமாகும்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் 2009ஆம் நிதியாண்டில் 9.9 பில்லியன் நட்டத்தைச் சந்தித்தது.

இது குறித்து தலைமை நிறைவேற்று அதிகாரி மனோஜ் குணவர்த்தன கூறுகையில்,இந்த நட்டமானது ,இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் வரும் மாதங்களில் குறையும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை,சிறிலங்கன் எயார் லைன்ஸ் தனது விமானப் பணியாளர்களின் உடை வண்ணத்தை மாற்றியுள்ளது.தற்போதைய மயில் வண்ண ஆடைக்குப் பதிலாக கண்டியன் சாறி முறைக்கு மாறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.62 | 115.21 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 174.76 | 178.35 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 152.47 | 156.10 |
| சுவிஸ் பிராங் | 103.65 | 106.87 |
| கனேடிய டொலர் | 107.33 | 110.84 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.44 | 103.45 |
| சிங்கப்பூர் டொலர் | 79.98 | 81.88 |
| ஜப்பான் யென் | 1.23 | 1.26 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.13 | |

## இந்திய பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதம்!

2009/10 நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.2 சத வீதமாக இருக்கும் என இந்திய மத்திய அரசு மதிப்பிட்டுள்ளது.இது முந்தைய ஆண்டில் 6.7 சதவீதமாக இருந்தது.

முன்னதாக நிதியமைச்சகம் மற்றும் ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை மறு ஆய்வு என்பவற்றில் வெளியிடப்பட்ட கணிப்புகளை விட பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துள்ளது.


எனினும் நிதியாண்டின் பிற்பாதியில் வளர்ச்சி 7சதவீதத்தை தாண்டி வேகமாக வளர்ச்சி அடைகிறது என புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

# அபிவிருத்தியில் முக்கிய பங்கு அச்சுத்துறைக்கு உண்டு-ஜனாதிபதி

(கொழும்பு)

அச்சுத்துறையானது இந்த நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்க முடியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை அச்சகக் கூட்டமைப்பு ஒழுங்கமைத்திருந்த மாநாடும் கண்காட்சியும் கொழும்பில் நடந்து வருகிறது.இதில் இலங்கை மற்றும் உலகின் முன்னணி அச்சு நிறுவன



மற்றும் அச்சக இயந்திர நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளன.

இக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு கொழும்பில் பிரபல ஹோட்டல் ஒன்றில் கடந்தவாரம் இடம்பெற்றது.இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செய்தியை வாசித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்படதாவது,அச்சுத்துறையில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்த வேண்டும்.புதிய டிஜிற்றல் தொழில்நுட்ப வரவால் மரபு வழி அச்சுத்துறை பாதிக்கப்படவில்லை எனவும், நாட்டை ஆசியாவின் அறிவு மையமாக மாற்ற அச்சுத்துறை முக்கியமான பங்கை ஆற்ற முடியும் எனவும் தெரிவித்தார்.

# ஆபிரிக்காவில் கால் பதிக்க ஏயார்ரெல் மீண்டும் முயற்சி

சுனில் மிட்டல் தலைமையின் கீழ் செயற்பட்டுவரும் பார்தி ஏயார்ரெல்,கையடக்க தொலைபேசி சேவையில்,வாடிக்கையாளர் எண்ணிக்கை அடிப்படையில் ,இந்தியாவின் மிகப் பெரிய நிறுவனமாகத் திகழ்கிறது. இதேநேரம் ஆபிரிக்காவின் கையடக்க தொலைபேசிச் சேவைத்துறை அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.எனவே இந் நிறுவனம் ஆபிரிக்காவில் கால் பதிக்க மீண்டும் முயற்சி செய்து வருகிறது. இதன் ஒரு கட்டமாக்க குவைத் நாட்டைச் சேர்ந்த 'சயின்' நிறுவனத்தின் ஆபிரிக்கப் பிரிவை ஆயிரத்து 70 கோடி டொலர் மதிப்புக்கு வாங்குவதற்கான பேச்சுவார்தையில் ஏயார்ரெல் ஈடுபட்டு வருகிறது. தற்போது ஏயார்ரெல் இலங்கை உட்பட 5 நாடுகளில் செயற்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# கடன் வழங்க தங்கம் விற்கும் சர்வதேச நாணய நிதியம்



கடந்த 2009ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியம் 403.3 தொன் தங்கத்தை விற்பனை செய்யப்போவதாக அறிவித்தது. இத் தங்கம் படிப்படியாக விற்பனை செய்யப்பட்டுவருகிறது.இத் திட்டப்படி விரைவில் 191 தொன் தங்கம் விற்பனை செய்யப்படுமென நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

ஏழை நாடுகளுக்கு குறைந்த வட்டியில் கடனுதவி செய்வதற்காக கையிருப்பில் உள்ள தங்கத்தில் அண்ணளவாக 12.5வீதத்தை விற்க ஐ.எம்.எப். முடிபு செய்தது.இதன்படி இதுவரை இலங்கை,இந்தியா மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகளின் மத்திய வங்கிகளுக்கு 212 தொன் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.இதில் அதிகபட்சமாக 200 தொன் தங்கத்தை 3.31 லட்சம் கோடி இந்திய ரூபாயுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வாங்கியது.இதன் மூலம் தங்கம் அதிகம் வைத்திருக்கும் நாடுகளில் இந்தியா பத்தாவது இடத்தைப் பிடித்தது.இந்நிலையில் மீதமுள்ள 191.3 தொன் தங்கமும் வெளிச் சந்தை பாதிக்காத வகையில் சந்தை விலைக்கேற்ப விரைவில் விற்பனை செய்யப்படுமென ஐ.எம்.எப்.தெரிவித்துள்ளது.

கு.முருகதாஸ்

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3768.81 | 36.09 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4343.04 | 83.80 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1668.60 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : டயலொக் ரெலிகொம்,என்வெயர்மென்டல் றிசோசஸ் ,அற்கின் ஸ்பென்ஸ்,றிச்சட் பீரிஸ்,ஹற்றன் நஷனல் வங்கி.
***சரிவைக்காட்டிய பங்குகள்***. த புக்கிட் ,சிறிலங்கா ரெலிகொம்,ஹேமாஸ் ஹோல்டிங் ,அவிவா என்டிபி இன்சூரன்ஸ்,கார்ஷன்.

# பிரபுதேவா பெயரை பச்சை குத்தியது ஏன்? நயன் பதில்



நடிகரும், இயக்குனருமான பிரபுதேவாவின் பெயரை பச்சை குத்தியிருப்பது ஏன்? என்ற கேள்விக்கு நயன்தாரா பதில் அளித்திருக்கிறார். சிம்புவுடன் காதல் முறிந்து வம்பான பின்னர் நயனுக்கு ஆறுதலாக இருப்பவர் பிரபுதேவா. மனைவி மற்றும் குழந்தைகளை பிரிந்திருக்கும் பிரபுதேவா, சமீப காலமாக நயன்தாராவுடனேயே பெரும்பாலான நாட்களை கழிக்கிறார்.

இருவருக்கும் ஏற்கனவே திருமணம் நடந்து விட்டது என்று ஒரு செய்தியும் இனிதான் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்று இன்னொரு செய்தியும் தெரிவித்து வரும் நிலையில் சமீபத்தில் சென்னை விமான நிலையத்தில் நயன்—பிரபுதேவா ஜோடி கைகோர்த்து வந்ததை பத்திரிகையாளர்கள் பார்த்தனர்.

நிருபர்கள் சூழ்ந்திருப்பதையறிந்த ஜோடி அங்கிருந்து வேறுவழியாக எஸ்கேப் ஆன செய்தி பரபரப்பாக பேசப்பட்டு வரும் நிலையில் மலையாள பத்திரிகையொன்றிற்கு நயன்தாரா அளித்திருக்கும் பேட்டி புது பரபரப்பை உருவாக்கியிருக்கிறது. அப்படி என்னதான் சொல்லியிருக்கிறார் நயன்? பிரபுதேவா பெயரை நான் பச்சை குத்தியிருக்கிறேன். எதற்காக அவர் பெயரை பச்சை குத்தியிருக்கிறார் என்று பலரும் கேட்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்னதான் நினைக்கிறார்கள் என புரியவில்லை. நமக்காக வாழ்கிறவங்க ளுக்காக நாம வாழுகிறோம். இது தான் உண்மை.

இது எல்லாருக்குமே பொருந்தும்.அதைத் தான் நானும் செய்கிறேன். எப்போதுமே நான் மற்றவர்கள் என்ன நினைப்பாங்கள் என்று யோசித்து கவலைப்படுறதில்லை. இந்த விடயத்திலும் அப்படித்தான். நான் மற்றவங்களுக்காக கவலைப்படவில்லை. திருமணம் எப்போது என்று நிறையப் பேர் கேட்கிறார்கள். தமிழில்ஆர்யா ஜோடியா பாஸ் என்கிற பாஸ்கரன் படத்திலும் தெலுங்கு, கன்னடம், மலையாள படங்களிலும் நடித்துக்கொண்டு இருக்கிறேன். இப்போதைக்கு கல்யாணம் பற்றி யோசிக்கவே இல்லை. அப்படி செய்யும் போது கண்டிப்பா சொல்கிறேன் என்று கூறியிருக்கிறார் நயன்தாரா.பிரபுதேவா தனக்காக வாழ்வதாகவும் அவருக்காக நானும் வாழ்கிறேன் என்றும் நயன்தாரா சொல்லாமல் சொல்லியிருக்கும் விவகாரம் கோலிவுட்டில் புது பரபரப்பை உருவாக்குகின்றது.

# அஜித் வீட்டிற்கு பலத்த பாதுகாப்பு



கலைஞருக்கு நடந்த பாராட்டு விழாவில், தன்னை மிரட்டி பல விழாவிற்கு வரவழைப்பதாக அஜித்குமார் தெரிவித்தார். இதனையடுத்து அஜித்திற்கு சினிமா சார்ந்து உள்ள சிலர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதில் ஸ்டண்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கமும் ஒருவர் ஆவார்.இதனையடுத்து ஸ்டண்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம் தனியார் நாளிதழ் ஒன்றுக்கு அஜித் பற்றிக் கடுமையான வார்த்தைகளால் விமர்சித்ததாக தெரிகிறது. இந்நிலையில் ஸ்டண்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கத்தின் கார் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர்களால் நொருக்கபட்டிருக்கிறது. இதற்கு அஜித் ரசிகர்கள் தான் காரணம் என்று. ஜாக்குவார் தங்கம் தரப்பில் குற்றம் சாட்டுகின்றனர். இந்தப் பேட்டி வந்ததிலிருந்து ஜாக்குவார் தங்கத்திற்கு அஜித் ரசிகர்களிடமிருந்து மிரட்டல் வந்ததாகவும் அவர்கள்தான் ஜாக்குவார் வீட்டில் இல்லாதபோதுகாரை அடித்து நொறுக்கி இருக்க வேண்டும் என்று ஜாக்குவார் தரப்பில் கூறப்படுகிறது.


மேலும் அஜித்தின் தூண்டுதல் காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளதாக ஜாக்குவார் தங்க குற்றம் சாட்டினார். இதனையடுத்து அஜித்தின் முகாமையாளர் உட்பட 18பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அஜித்தின் வீட்டினை முற்றுகையிடப் போவதாகஜாக்குவார் தங்கம் கூறியதாக தெரிகிறது.முன்னெச்சரிக்கைநடவடிக்கையாகதிருவான்மையூரில் உள்ள அஜித்தின் வீட்டிற்கு பொலிஸ் பலத்த பாதுகாப்புஅளித்துள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான் அஜித்ரசிகர்கள் அவரது வீட்டின்முன் கூடியுள்ளனர்.

## கதாநாயகன் இல்லாத படம் மகளிர் கல்லூரி



கல்லூரி வாழ்க்கையேகலகலப்பானது. இந்தப்பருத்தில் மாணவிகள் சேர்ந்து கும்மாளமிடுவதும், வரம்பு மீறி சுதந்திரமாக திரிவதும் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தும்? என்பதை மையமாக வைத்து மகளிர் கல்லூரி என்ற படம் தயாராகிறது. கோவையில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு உருவாகும் படம் இது. பத்து மாணவிகளுக்கும் அவர்களை பந்தாட நினைக்கும் கண்ணுக்கு தெரியாத ஒரு எதிரிக்கும் இடையே நடக்கிற போராட்டத்தை யூகிக்க முடியாத திருப்பங்களுடனும் மர்ம முடிச்சுகளுடனும் சொல்லியிருக்கிறார் டைரக்டர் பாபுராஜ். கதாநாயகன் இல்லாத படம் இது. இலங்கையை பிறப்பிடமாக கொண்டு, சென்னையில் மொடல் அழகியாக இருந்து வரும் துஷ்யந்தி, கதை நாயகியாக நடிக்கிறார். இதுவரை கவர்ச்சி நடனம் ஆடிவந்த சுஜா, இந்த படத்தில் தோழியை காப்பாற்ற துடிக்கும் அழுத்தமான வேடத்தில் நடிக்கிறார். ரம்யா நம்பீசன், சினிமா நடிகையாக கௌரவவேடத்தில் தோன்றுகிறார்.வாணி விஸ்வநாத், போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார். இவர்களுடன் முக்கிய வேடங்களில் மலையாள நடிகர் சுரேஷ் கோபி, மற்றும் சாய்குமார் நடிக்கிறார்கள்.பி.சுகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். ராஜாமணி இசையமைக்கிறார். பாபுராஜ் டைரக்ட் செய்கிறார். எஸ்.ஆர்.ஜி. பிலிம்ஸ் சார்பில் விஷ்ணு ராஜகோபால் தயாரிக்கிறார்.

## உடல்நிலை முன்னேற்றம் வீடு திரும்பினார் டி.எம்.எஸ்



எஸ். உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த சினிமா பின்னணி பாடகர் டி.எம். சவுந்தரராஜன் (வயது 87) மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.அவரது உடல்நிலை நலமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். தமிழ் சினிமாவின் முடிசூடா மன்னனாக திகழ்ந்த டி.எம்.எஸ். உடல்நலக்குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு தீவிரசிகிச்சைப் பிரிவில்அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. ஞாபகசக்தி குறைந்ததால் பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டன. உடலில் உப்பின்அளவு குறைந்துவிட்டதாலும் மூளை நரம்பில் பாதிப்பு ஏற்பட்டதாலும் ஞாபக சக்தி குறைந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர்.டாக்டர்களின் தொடர் சிகிச்சையால் டி.எம்.எஸ். உடல் நிலையில் நல்லமுன்னேற்றம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார். அவரது உடல்நிலை தற்போது நன்றாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

# திரை விமர்சனம்

# தீராத விளையாட்டு பிள்ளை



அடிதடி ஹீரோவாகவே வலம் வந்து கொண்டிருந்த விஷால், விளையாட்டுப் பிள்ளையாக பயணம் செய்திருக்கும் படம். எதிலும் சிறந்ததை தேர்ந்தெடுக்கும் வழக்கம் கொண்ட விஷால், தனக்கு வரப்போகும் மனைவியையும் தேர்வு செய்ய நினைக்கிறார்.

அதற்காக 3 பெண்களை தேர்ந்தெடுத்து, காதலித்து அவர்களில் ஒருவரை மனைவியாக்க நினைக்கிறார். தீராத விளையாட்டு பிள்ளையான விஷாலின்இந்த விளையாட்டு விபரீதமாவதும், அதிலிருந்து அவர் எப்படி விலகுகிறார் என்பதும்ஜாலி கலாட்டாக்கள். கடைக்காரரிடம் ஒரு டசின் பேனாவை வாங்கி அதில் உள்ள அனைத்தையும எழுதிப்பார்த்து அதில் ஒன்றை தேர்வு செய்தல், பக்கத்து வீட்டு அன்ரி நிறைமாத கர்ப்பமாக இருக்கும்போது எந்த அம்புலன்ஸ் உடனடியாக வருகிறது என்பதை அறிவதற்காக ஊரில் உள்ள அம்புலன்சையெல்லாம் வரவழைத்து அதில் சீக்கிரம் வரும் அம்புலன்சை தேர்ந் தெடுப்பது என விஷாலின் கரக்டரை முதலிலேயே ஆணித்தரமாகச் சொல்லிவிடுவதில் இருந்து தொடங்குகிறது காமெடி கலாட்டா. ஆட்டோ டிரைவர் சந்தானம் டீக் கடைக்காரார் மயில்சாமி டிரபிக் கான்ஸ்ரபிள் சத்யன் என மிடில் ஏஜ் நண்பர்ள் சகிதம் தன் காதல் வேட்டையை விஷால் ஆரம்பிக்க காமெடி எக்ஸ்பிரஸ் வேகமெடுக்கிறது.

காதலில் தோற்று மற்றுமொரு நல்ல காதலனை தேடிக் கொண்டிருக்கும் கோடீஸ்வரி நீது சந்திரா, ஆண் இனத்தையே பிடிக்காத தனுஸ்ரீதத்தா, ஒருவனையே காதலித்து அவனையே மணந்து கொள்ள நினைக்கும் நடுத்தர கும்பத்து பெண் சாரா ஜென். இவர்கள் விஷாலின் தெரிவுக்குள் வரும்போது காமெடியுடன் கிளாமரும் சேர்ந்து கொள்ள, கலர்புல்லாகிறது படம்.

ஆண்களை வெறுக்கும் தனுஸ்ரீதத்தா முன், பெண்களை வெறுப்பவராக நடித்து வெறுப்பேற்றி நுழைகிறார். வித்தியாசமான ரசனை கொண்டவராக நடித்து கோடீஸ்வரி நீது சந்திராவை வலையில் வீழ்த்துகிறார்.

காதலனாக நடிக்க சான்ஸ் கேட்டு காதலனாகவே மாறி சாரா ஜென்னுக்கு பிராக்கெட் போடுகிறார். மூன்று விதமான குணாதிசயங்களைக் கொண்ட பெண்களை வலையில் வீழ்த்த இப்படி விஷால் போடும் காதல் ஐடியா அப்ளாஸ் தரம்.பெண்களை வலையில் வீழ்த்திய பின்னர் தன் மார்பில் தானே தட்டிக்கொடுத்து பாராட்டிக் கொள்ளும் மனம் விஷாலின் ஆச்சர்ய மாற்றங்களில் ஒன்று. குடியிருக்க ஒரு வீடு பார்த்தாக் கூட, நாலு வீடு பார்த்து பிடிச்சதில் குடிபோறோம்.

நம்ம வாழ்க்கையில குடிவரப்போற மனைவியை மட்டும் பார்த்தவுடனேயே தீர்மானிக்கிறது எப்படி சரியாகும்? என்று தனது தேடலுக்கு நியாயம் கற்பிக்கும்போது, காதல் என்கிறது வீடு பாக்கிற மாதிரி சாதாரண விடயமில்லை என்று உணர்ந்து வருந்தும் போதும் புது விஷாலைப் பார்க்க முடிகிறது. ஆனாலும் ஹீரோ வேஷம் போட்ட பின்னர் பைட் சீனுக்கு பயந்தா முடியுமா? என்று ஆக்ஷன் காட்சிகளில் அதே ஆக்ரோஷத்துடன் நிமிர்ந்து நிற்கிறார். தனுஸ்ரீ தத்தாவின் அண்ணன் பிரகாஷ்ராஜிடம் அவர் மாட்டிக் கொள்ள அவரோ ஊருக்கே அவரை அறிமுகப்படுத்தி வைக்க அப்போது விஷால் படுகிற அவஸ்தை விழுந்து விழுந்து சிரிக்க வைக்கிறது.

விஷாலின் காதல் வேட்டை இரகசியத்தை முதலில் கோடீஸ்வரி நீது சந்திராவுக்கு தந்தை மூலம் தெரியப்படுத்தி அவரையே விஷாலின் வில்லியாக்கி பின் பாதி விறுவிறுப்புக்கு கொடுத்து இடைவேளை விடுவதிலிருந்து இயக்குனர் திருவின் கொடி பறக்க ஆரம்பிக்கிறது. நீ ஆம்பிளையா இருந்தா மற்ற இரு பெண்களில் ஒருத்தியையாவது திருமணம் செய்து காட்டு என்று நீது சவால்விட்டு தன் பணக்காரத் தனத்தோடு காய்நகர்த்த, அதிலிருந்து தனது புத்திசாலிதனத்தால் விஷால் தப்பிப்பது, தங்கையை ஏமாற்றி காதலித்தான் என்பதற்காக தாதா பிரகாஷ்ராஜ் அரிவாளை கையிலெடுக்க...என்று பின்பகுதி ஆடுபுலி ஆட்டமாகிறது.



இறுதியில் விஷால் யாரைத் தேர்வு செய்வார். எப்படித் தேர்வு செய்வார் என்ற பரபரப்புடன் திரைக்கதையை கொண்டுசென்று சரியானவரை சரியான வழியில் விஷாலுக்கு ஜோடியாக்கி சுபம் போடுகிறார் இயக்குனர் திரு .யுவனின் இசையும் அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவும் தீராத விளையாட்டுக்கு நல்ல தீனி போட்டிருக்கிறது காதலை விளையாட்டாக எடுத்துக்கொள்ளும் ஒரு இளைஞன் காதலின் ஆழத்தை அறிந்து கொள்ளும் அனுபவத்தை காமெடி,கலாட்டா, கவர்ச்சி, கருத்து கலந்து சொல்லி இருப்பதன் மூலம் விளையாட்டில் வெற்றி பெற்றிருக்கிறது விஷால்குழு.

**தீராத விளையாட்டு பிள்ளை: காதல்+ காமெடி+ விளையாட்டுப்பிள்ளை**




# த்ரிஷாவின் கனவுகள் மூன்று

மூன்று கனவுகள் நிறைவேறியதாக கூறினார் நடிகை த்ரிஷா. இதுபற்றி அவர் கூறியதாவது:நான் நடித்த படங்களிலேயே என்ன கவர்ந்த படம் கவுதம்மேனனின் விண்ணை தாண்டி வருவாயாதான். ஜெஸ்ஸி என்ற மலையாள கிறிஸ்தவ பெண்ணாக நானும். கார்த்திக் என்ற பாத்திரத்தில் சிம்புவும் நடிக்கிறோம். கதை சொல்லும்போதே நிஜவாழ்வில் எப்படி இருப்பேனோ அதேபோல் நடித்தால் போதும் என்றார் இயக்குனர். சிம்புவும் கதையில் ஒன்றி இருந்ததால்அவரது நடிப்பும் இயல்பாகவே அமைந்தது. இருவரும் கடந்த 7 வருடமாக நெருங்கிய நண்பர்களாக இருக்கிறோம்.எங்கள் இருவருக்கும் காதல் என்று எழுதுகிறார்கள்.



நெருங்கிய நண்பருடன் ஒரு போதும் காதல்மலராது. திரையுலகுக்குள் நுழையும் போது3 கனவுகள் எனக்கிருந்தது; அதில் மணிரத்னம் படத்தில் நடிப்பது, ஏ.ஆர்.ரகுமானை சந்திப்பது என்ற 2 கனவுகள் நிறைவேறிவிட்டன. கமலுடன் நடிக்கும் கனவும் இப்போது நிறைவேறி இருக்கிறது. மர்மயோகி படத்திற்காக கமலுடன் 10 நாட்கள் நடிப்பு ஒத்திகையில் பங்கேற்றேன். அவரைப் போல்திறமைசாலியை பார்த்ததில்லை இவ்வாறு த்ரிஷா கூறினார்.













கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாசாலையின் பரிசுத்தின நிகழ்வு நேற்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்துக் கல்லூரியின் உப அதிபர் தவராஜா மங்கல விளக்கேற்றுவதையும், பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெறுவதையும், பாடசாலை அதிபர் செல்வி க.கமலநாயகி மற்றும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நம்சன்)

## தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட சுமார் 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் அமைப்பிற்கு தேர்தல் செயலகம் அனுமதி வழங்கியுள்ளது.

தேர்தல் ஆணையாளருக்கும் பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சுயாதீனமானதும் பக்கச்சார் பற்றதுமான முறையில் தேர்தல்களை நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

கடந்த தேர்தல்களின் போது ஏற்பட்ட சிக்கல்களை நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் இம்முறை தேர்தல்கள் அமையப்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## வாக்கு எண்ணும் நடவடிக்கைகளை பார்வையிட அனுமதியளிக்கவேண்டும்

### பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது வாக்கு எண்ணும் நடவடிக்கைகளையும் பார்வையிட அனுமதியளிக்கப்பட வேண்டுமென பவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு எண்ணும் நடவடிக்கையின் போது முறைகேடுகள் இடம்பெற்றதாக ஐக்கிய தேசியக் கட்சி சுமத்தி வரும் குற் றச்சாட்டுக்களை கருத்திற் கொண்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

இதற்கமைய சிரேஸ்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பவ்ரல் மற்றும் கபே ஆகிய அமைப்புக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது 15 ஆயிரம் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தத்திட்டமிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6)

### ஜே.வி.பி.கூட்டணிக்கு முன்னாள் பிரதம நீதியரசர் ஆதரவு

(கொழும்பு)

வெற்றிக் கிண்ண சின்னத்தில் போட்டியிடும் ஜே.வி.பி.கூட்டணிக்கு முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆதரவளிக்க உள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் பிரதான பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு பிரதம நீதியரசர் ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க வெற்றிக் கிண்ண சின்னத்தில் போட்டியிடக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (6)

## பொதுத்தேர்தல் கடமைகளில் 3 இலட்சம் உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் கடமைகளில் 3 இலட்சம் அரசாங்க உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த உத்தேசிப்பதாக தேர்தல் செய லகம் தெரிவித்துள்ளது.

இம்முறை தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்றவர்களின் விபரங்களை தேர்தல் தலைமை செயலகத்துக்கு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலின்போது 2 இலட்சத்து 50 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டனர்.

மேலும் தேர்தலில் வெற்றிபெறும் கட்சி அபேட்சகர்களின் விருப்பு வாக்குகள் முதலில் எண்ணப்படும் என்றும் ஏனைய வேட்பாளர்களின் விருப்புவாக்குகள் பின்னர் எண்ணப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (6)

## மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடனான தபால் அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு நவீன தொழில் நுட்பத்துடனான தபால் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு உட்பட நெரிசல் மிக்க பகுதிகளில் 4 மணித்தியாலங்களுக்குள் தபால் பொதிகளை விநியோகிக்கும் வசதிக்காக விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6-4)




## தமிழினம் ஒரே கட்சியில் ஒன்று சேருமா?

சிங்கள, தமிழ் மன்னர்களால் ஆளப்பட்ட கண்டி, கோட்டை, யாழ்ப்பாண இராட்சியங்கள் அன்னியராம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டு இறுதியாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த போது ஆங்கிலேயரால் கண்டி, கோட்டை, யாழ்ப்பாண இராட்சியங்களை மீள இலங்கையரிடம் ஒப்படைக்க முன்வரும் பொழுது அக்கால தமிழ் தலைவர்கள் தமிழ் இராட்சியத்தை பிரித்துப் பெறாமல் சிங்கள பெரும்பான்மை இராட்சியத்துடன் பல நியதிகளின் அடிப்படையில் நம்பிக்கை வைத்து ஒரே இலங்கையாக சேர்ந்து ஆளுவதற்கு இணங்கி ஆட்சியை ஒருமித்துப் பெற்றுக் கொண்டதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

குறுகிய அரசியல் இலாபம் பெறமுற்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த அரசியல்வாதிகள் தமிழரும் சிங்களவரும் சேர்ந்து நாட்டை பெறும்பொழுது ஏற்படுத் திக் கொண்ட நல்லெண்ண நியதிகளை புறம் தள்ளிவிட்டு யாழ்ப்பாண இராட்சியத்தின் தனித்தன்மை -அடையாளம் என்பவற்றையே சிதைக்க , வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நடவடிக்கைகளில் இறங்கியமையால் பிரிந்து , தனித்து நின்ற தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தமிழ் மக்களின் வாழ்வு, சுதந்திரம் குறிப்பாக தமிழ்மண் என்பவற்றின் நன்மை,பாதுகாப்பு என்ற நோக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கி ஒன்றுபட விரும்பினார்கள்.

இதன் அடிப்படையில் தந்தை செல்வநாயகம் அவர்கள் தனது தமிழரசுக்கட்சியையும் வீட்டுச் சின்னத்தையும் துறந்தார். தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் தனது தமிழ் காங்கிரஸ் கட்சியையும் சைக்கிள் சின்னத்தையும் துறந்தார். தலைவர் தொண்டமான் அவர்கள் தனது தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் கட்சியையும் சேவல் சின்னத்தையும் துறந்தார்.

மூவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சிக்குள் உதய சூரியன் சின்னத்துக்குள் சங்கமமானார்கள். இறக்கும் வரை தந்தை செல்வா, தலைவர் ஜீ.ஜீ ஆகியோர் பொது நோக்கத்தை கைவிடவோ தனித்து பிரிந்து செல்வோ முற்படவில்லை.

குறித்த தலைவர்களின் ஒரே இலட்சியம் அவர்களின் பின்வந்த தளபதியென வர்ணிக்கப்பட்ட முன்னைநாள் எதிர்க்கட்சித்தலைவரான அ.அமிர்தலிங்கம் அவர்களும், உடுப்பிட்டிச் சிங்கம் என வர்ணிக்கப்பட்ட முன்னாள் உபசபாநாயகருமான மு.சிவசிதம்பரத்தாலும் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டதாகும்.

ஆனால் அண்மைக் காலத்தில் நடந்து முடிந்த தேர்தல்களில் போட்டியிட்டவர்கள் பழம் பெருமைக்குரியவர்களின் இலட்சியத்துக்கு மாறாக பிரிந்து நின்று போட்டிபோட்டதன் மூலம் தமிழினம் அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது.

நாளுக்கு நாள், நேரத்துக்கு நேரம் ,நிமிடத்துக்கு நிமிடம் தமிழருக்கும் தமிழ் தாயகத்துக்கும் அடையாளமில்லாது போய்க்கொண்டிருக்கும் இந்த நேரத்திலாவது தமிழர்கள் பழம் பெருமைக்குரிய தலைவர்கள் காட்டிய பாதையில் அவர்களது ஒரே கட்சி, ஒரே சின்னத்தை ஏற்று ஒரே அணியில் நிற்பார்களா? காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

**அ.இராஜரட்ணம்**
**சிரேஷ்ட சட்டத்தரணி.**

# லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் 5 வேட்பாளர்கள் போட்டி

(கொழும்பு)

லங்கா சமசமாஜ கட்சியிலிருந்து ஐந்து வேட்பாளர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் களமிறக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் விதம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் திஸ்ஸ விதாரண மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது ,

இம்முறை ஐந்து வேட்பாளர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினூடாக களமிறக்கவுள்ளோம். நாம் இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து செயற்படுகின்றோம் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

காலி, களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களிலேயே வேட்பாளர்களை களமிறக்கின்றோம்.

மேலும் இரண்டு வேட்பாளர் களை இணைத்துக்கொள்ள முழு முயற்சி எடுக்கின்றோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனு சபையில் எமது கட்சியின் சார்பில் 5 வேட்பாளர்கள் போட்டியிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு வேட்பாளர்கள் தொடர்பில் சில தினங்களுக்கு பேச்சு நடத்த வேண்டும்.

முக்கியமாக எமது கட்சியில் இருந்து காலி மாவட்டத்தில் பத்தேகமசமிந்ததேரர் கூட்டமைப்பின் ஊடாக போட்டியிடுகின்றார் என்றார். (6)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை

(கொழும்பு)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கணேசபுரம், முத்து விநாயகபுரம், தட்டய மலை மற்றும் வித்தியாபுரம் கிராம அலு வலர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து ஏனைய மாவட்டங்களில் உறவினர் மற்றும் நண்பர்களுடன் தங்கியிருந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பதிவு செய்து அனுமதிச் சீட்டை பெற்றவர்கள் அனைவரையும் அவர்களது சொந்த இடங்களுக்கு மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 7 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்திற்கு தமது சொந்த இடத்திற்கு செல்வதற்கான ஆயத்தங்களுடன் வருகை தருமாறும் மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மீள்குடியேற்றத்திற்காக இதுவரை பதிவு செய்யாதவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பதிவு செய்து அனுமதிச் சிட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (6)

# வன்னி மாவட்டத்தில் 2,66, 975 பேர் பொதுத்தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல்' தொகுதியில் 209 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் 85 ஆயிரத்து 322 வாக்களர்களுக்காக 68 வாக்களிப்பு நிலையங்களும், வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 924 வாக்காளர்களுக்காக 91 வாக்களிப்பு நிலையமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 68 ஆயிரத்து 729 வாக்காளருக்காக 50 வாக்களிப்பு நிலையங்களும் நிறுவப்படவுள்ளன. வன்னி மாவட்டத்தில் மொத்தம் 2 இலட்சத்து 66 ஆயிரத்து 975 வாக்காளர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர்.

இறுதியாக கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது வன்னி மாவட்ட வாக்களர்களுக்காக கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-9)

# நாட்டில் ஜனநாயக விழுமியங்கள் உணர்வற்றுசெயலிழந்துபோயுள்ளன

## அனோமா பொன்சேகா

(கொழும்பு)

ஜனநாயக விழுமியங்கள் உணர்வற்று செயலிழந்து போயுள்ளன. ஒரு குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சி முழு நாட்டையும் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது. எனவே இந்த நாட்டையும் மக்களையும் சிறைவாசம் அனுபவிக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

நீதிகிடைக்க வேண்டுமாயின் கடவுளிடம் மன்றாடுவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே பொது மக்கள் அனைவரும் தத்தமது மத வழிபாடுகளில் ஈடுபடுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

ஜெனரல் சரத் பொன்சேகா விரைவாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் உட்பட அனோமா பொன்சேகா ஆகியோர் நேற்று முன்தினம் கொழும்பு முகத்துவாரம் காளி கோயிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் உரையாற்றும் போதே அனோமா பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டை கொடிய யுத்தத்தில் இருந்து மீட்டெடுக்க தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் தான் எனது கணவர் ஜெனரல் சரத் பொன்சேகா. இவரை இன்று அரசியலில் ஈடுபட்டார் என்ற ஒரே காரணத்திற்காக பொய் குற்றச்சாட்டுகளை முன் வைத்து சிறையில் அடைத்துள்ளனர்.

இவரை விடுதலை செய்துகொள்ள சட்டத்துடன் போராடும் அதேசமயம் மறுபுறம் கோயில் குருமாரை நாடி பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றோம். இதைத் தவிர வேறு வழிகள் கிடையாது. ஏனென்றால் இன்று இலங்கையில் மிகமோசமாக குடும்ப ஆட்சி மேலோங்கியுள்ளது என்றார்.

இங்கு உரையாற்றிய ஜனநாயக மக்கள் முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.ராஜேந்திரன் கூறுகையில்,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புகள் அகற்றப்பட்டுள்ளன. தற்போது காணப்படும் வன்முறைச் சூழலில் பாதுகாப்புகள் பறிக்கப்பட்ட நிலையிலேயே எதிர்க்ககட்சிகளின் உறுப்பினர்கள் தேர்தலில் ஈடுபட வேண்டியுள்ளது.

ஆனால் அரசாங்க வேட்பாளர்களுக்கு சகல பாதுகாப்புகளும் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இது மிகவும் மோசமான நிலையாகும். எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் ஒரு போதும் ஜனநாயகமான முறையில் நடைபெறாது. எதிர்க்கட்சிகள் மிக மோசமான வன்முறைச் சூழலை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்றார். (6)

# இம்முறை தேர்தல்கள் செயலகத்தினூடாக விசேட அடையாள அட்டை விநியோகம்

## கிராமசேவகரூடாக விண்ணப்பிக்க அறிவுறுத்து

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு எந்தவொரு அடையாள அட்டையும் இல்லாத வாக்காளர்களிற்கு தேர்தல் செயலகத்தினால் அடையாள அட்டைகள் விநியோகிக்கப் படவுள்ளன.

ஆட்பதிவுத் திணைக்களத்தினூடாக இம்முறை தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கப்படமாட்டாதென தேர்தல்கள் செயலகத்தின் சிரேஸ்ட ஆலோசகர் பந்துல குலதுங்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தினால் விநியோகிக்கப்படும் தற்காலிக அடையாள அட்டை தேவையான வாக்காளர்கள் கிராம சேவகர்கள் மூலம் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு புகைப்படங்களுடன் கூடிய விண்ணப்பங்களை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கிராம சேவகர்களூடாக விண்ணப்பிக்குமாறு தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. (6-14)


## WANTED: OFFICE SPACE ON RENT FOR AN INTERNATIONAL ORGANIZATION

IOM – International Organization for Migration is the leading inter-governmental organization in the field of migration and works closely with governmental, intergovernmental and non-governmental partners. Headquartered in Geneva, Switzerland IOM has 125 member states and 16 observer states to its Executive Council and has office presence in over 100 countries.

IOM is looking for an office space in the Jaffna Municipality area with the following conditions:

- Building should be in good condition.
- Should have floor area of minimum 3,000 Square feet & maximum 4,500 Square feet.
- Should have attached toilet, water & electricity facilities.
- Compound with at least 40 perches land in extend and parking space for at least five (05) vehicles.
- Parapet boundary wall on all four sides.

Those who are in possession of a building matching the above-mentioned requirements are requested to send sealed applications in detail with the proposed terms and conditions to the below mentioned address **on or before 01/03/2010.**

**The Head of Sub-Office**
**International Organization for Migration (IOM) - 70, Temple Road, Jaffna.**

(464)



Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.alimas.com, www.iimat.com, www.alcomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2010

துதிபாடும் கூட்டத்தை உருவாக்கு வதே அரசாங்கக் கலை

~ பெர்னார்ட்ஷா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அர்ஜுனா பந்தை அடி சுசந்திகா பந்தை ஓடிப்பிடி

நாடாளுமன்றத் தேர்தல் நாடுபூராகவும் சூடு பிடித்துள்ளது. எதிர்பார்த்திராத பலர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதில் நாட்டின் முன்னணி விளையாட்டு வீரர்களும் இடம்பிடித்துள்ளனர்.

தேர்தல் களத்தில் இவர்கள் குதிப்பது கராம்பு போட்ட கறிபோல தேர்தலிலும் கமகம வாசம் வீசவே செய்யும்.

முன்னைய மூன்றாம் தரத் தமிழ்ப் புத்தகத்தில் ஒரு கதை. நிமால் பந்தையடி. பாலா பந்தைப்பிடி. அது அந்தக் கதையின் சாரம்.

சிங்கள நிமாலும் தமிழ்ப் பாலாவும் ஒற்றுமை யாக விளையாடுகின்றனர் என்பதை காட்டுவதற் காக அந்தக் கதை சோடிக்கப்பட்டது.

கதைகதையாக இருந்தமையால் பாடம் பாதை மாறியது.

நிமாலும் பாலாவும் பந்தை மட்டுமல்ல; வெடி குண்டையும் அடித்துப் பிடித்து விளையாடி பார் வையாளர்களை பரலோகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

நிமாலும் பாலாவும் சேர்ந்து பந்தை அடியுங் கள், பாகிஸ்தானையும், சீனாவையும் தோற்கடி யுங்கள் என்று பாடப்புத்தகத்தில் கதை எழுதியி ருந்தால் நிலைமை வேறாகி இருந்திருக்குமோ என ஏழை மனம் எண்ணுகிறது.

விளையாட்டின் ஊடாக இன ஒற்றுமையை வலியுறுத்தியதெல்லாம் கடந்து இப்போது எல்லாம் விளையாட்டாக மாறிவிட்டது.

இந்த விளையாட்டில் நாடாளுமன்றமும் விளையாட்டு மைதானமாக மாறுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தல் ஏற்படுத்திக் கொடுக்குமென நம்பலாம்.

ஆம். எதிர்வரும் தேர்தலில் இலங்கை கிரிக் கெட் அணியின் தலைவராக இருந்த அர்ஜுன ரணதுங்க மற்றும் சனத் ஜெயசூரியா, முத்தையா முரளிதரன், ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெய சிங்கா ஆகியோர் தேர்தலில் போட்டியிடுகின் றனர்.

இவர்கள் வென்றால் அர்ஜுனா, ஜெயசூரியா, முரளி ஆகியோர் பந்தை அடிக்க அதனை சுசந் திகா ஓடிப்பிடிக்க,

சபாநாயகர் எழுந்து நின்று நான்கு ஓட்டங் கள், ஆறு ஓட்டங்கள் என்று அறிவிக்க நாடாளு மன்றம் நல்லதொரு விளையாட்டுக் களமாக மாறும்.

நாடாளுமன்றத்தில் அடிக்கப்படும் பந்து எங் கள் தமிழ் எம்.பிக்களின் தலைகளில் படாமல் இருக்க-சுசந்திகாவின் மூச்செறிந்த ஓட்டத்தால் எங்கள் மூத்த தமிழ் எம்.பிக்களின் இதயத் துடிப்பு தடைப்படாமல் இருக்க அந்த ஆண்டவன் தான் உதவவேண்டும்.

# பொதுத் தேர்தலின் பின் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்-ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் கட்சித் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது மிகவும் இலகுவாக வெற்றியீட்ட முடியும் எனவும் குறிப்பாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அடைய முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறைந்த பட்சம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அருகாமையில் செல்லக் கூடிய சாத்தியமேனும் காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் என்னுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியது தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சி களின் தலைவர்களது கடமை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தத் தவறும் பட்சத்தில் புதிய தலைவர்களுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக ளுக்கு தீர்வு வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே சரத் பொன்சேகாவை கைது செய்ய இராணுவத்தினர் அனுமதி கோரியதாகவும் அப்போது கைது செய்திருந்தால் தேர்தலுக்கு அஞ்சி கைது செய்தாக விமர்சனங்கள் எழக்கூடும் என்பதனால் அப்போது கைது செய்ய அனுமதியளிக்கவில்லை எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (6)

# பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் கொழும்பு மாவட்டத்தில் போட்டி

(கொழும்பு)

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் மண் வெட்டி சின்னத்தில் தனித்துப் போட்டியிடும் மலையக மக்கள் முன்னணி கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் முன்னாள் பிரதியமைச்சர் இரா தாகிருஷ்ணன் போட்டியிடவுள்ளதாக கட்சியின் பொதுச் செய லாளர் தெரிவித்தார். (6)

# மல்வத்து பீட விகாரைகளை ரோஹன பிரிவிற்குள் உள்ளடக்க நடவடிக்கை

## ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

பௌத்த மதத் தைப் பாதுகாக்க அரசாங்கம் நட வடிக்கைஎடுக்கவேண் டுமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க கோரிக் கை விடுத்துள்ளார்.

சில பௌத்தபிக் குகள் பௌத்தமதக் கோட்பாடுகளுக்கு புறம்பான வகையில் செயற்பட எத்தனிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தெற்கில் காணப்படும் 500 மல்வத்து பீட விகாரைகளை ரோஹண பார்ஷவய என்னும் பிரிவிற்குள் உள்ளடக்க நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், பௌத்த மதத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளை அரசாங் கம் எடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த மதத்தின் முக்கியத்துவம் தொடர் பில் அரசியல் சாசனத்திலும் பரிந்துரைக் கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், 1815 ஆம் ஆண்டு கண்டிப் பிரகடனம் 1972 ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப் பட்டதாக தெரி வித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தின் ஊடாக மல்வத்து மற்றும் அஸ்கிரி பீடங்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது என வும் மல்வத்து, அஸ்கிரி,ராமன்ய மற்றும் அமரபுர ஆகிய நிக்கயாக்களில் மல்வத்து பீடம் மிகவும் முதன்மையானது என அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஏனெனில் திரிபீடகம், புனித தந்தம் ஆகியவற்றை பாதுகாத்தல் மற்றும் தேரவாத பௌத்த மதத்தைப் பரப்புதல் போன்ற பணி களை மல்வத்துபீடம் முன்னெடுத்து வருவ தாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் மல்வத்துபீடத்தை வலுவிழக்கச் செய்வது அரசி யல் சாசனத்தை மீறும் ஓர் செயற்பாடாகும் எனவும் வரலாற் றுக் காலத்தி லும் மல்வத்து பீடத்தை வலுவிழக்கச் செய் யும் முயற்சிகள் இடம்பெற்றதாகவும் இதனை மக்கள் நிராகரித் துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மல்வத்து பீடாதிபதியை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத் தினால் அவர் ஐக்கியதேசியக் கட்சியின் கொள்கை களுக்கு ஏற்ற வகையில் செயற்படுவதாக பிரசாரங்கள் மேற்கொள்ளப் படக்கூடும் என ரணில்விக்கிரம சிங்கதெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கத்தின் ஆதரவுடன் மல்வத்து விகா ரைக்குச் சென்ற புத்தபிக் குகள் சிலர் மல்வத்து மாநாயக் கரை அச்சு றுத்தியுள்ளதாகவும் இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் குறித்த தகவல்கள் கிடைத் துள்ளதாகவும் அவற்றை எதிர்வரும் காலங்களில் வெளியிடப் போவதா கவும் அவர் கூறியுள்ளார்.

மல்வத்து மாநாயக்க தேரரை அச்சுறுத்த சென்றவர் களுக்கு அரசாங்கம் அனுசர ணை வழங்கியதாகவும் இது குறித்து அரசாங்கம் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை என்ன என்பதை நாட்டிற்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். (6)

# சோதனை ஏன்? யாருக்கு?


## பரமபிதா காட்டிய பாதை

புடமிட்டுச் சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப்போல், தவம் செய்கின்றவரைத் துன்பம் வருத்த வருத்த மெய்யு ணர்வு மிகும்.

ஆம், சோதனைமேல் சோதனை போதுமடா சாமி என்று கவிஞன் மனித வாழ்வில் மேலிடும் சோதனையின் வேத னையைப் பாடுகின்றான். அப்படியென்றால்,சோதனை என் பது மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்று. சோதனை இல்லா மானிட வாழ்வே கிடையாது . காரணம் உலகம் தோன்றியது முதலே இந்த சோதனையின் வேர் மானிட வாழ்வைத் துளையிட ஆரம்பித்துவிட்டது. அதிலும் குறிப்பாக மானிட உடல் (தசை) கொண்ட யாவருக்கும் அது ஆண் டவனே என்றாலும் சோதனை உண்டு. இதிலிருந்து யாரும் தப்பித்து கொள்ள முடியாது. இதுதான் இன்றைய நற்செய் தியின் மையக் கருத்து.

இன்று தவக்காலத்தின் முதல் வாரத்தில் அடியெடுத்து வைக்கின்றோம். இந்தக் தவக்காலம் முழுவதும் சோதனையை முறியடிக்கும் காலமாகக் கருதினோம் என்றால் அந்த சோத னையை முறியடிப்பதற்கான காரணிகளை ஆராய வேண் டும். அதற்கு முன் சோதனை ஏன்? என்ற கேள்வியையும் சோதனை யாருக்கு என்ற கேள்வியையும் எழுப்பி அதற்கு விடை கண்டால் அதை வெல்வதற்கான வழி தானாகப் பிறக் கும்.

படைப்புக்களில் ஒரு நியதி உண்டு. அந்நியதிகளுக்கு நாம் காரணம் கேட்க முடியாது. ஆனால் காரணங்களைக் கண்டு பிடித்து அவற்றை நம் தேவை களுக்கு உரமாக்கலாம். மழை நல்லது தான் ; ஆனால் பெரு வெள்ளம் அழிவை உண்டாக் குகின்றது. இதற்குக் காரணத் தைக் கேட்ட முடியாது. ஆனால் காரணங்களை கண்டுபிடித்து விடலாம்.



அதேபோல மனித வாழ்வில் சோதனைகள் தேவை ; அவை நல்லவைகள். காரணம் தொடக்கக் குறளில் பார்த் தது போல பொன்னை உலையிட்டு புடமிடுவது போல நம் முடைய வாழ்வும் சோதனைகளால் புடமிடப்படுகின்ற போது வாழ்வு மிளிரும்; வளமையாகும்.

ஆம். நாம் இன்று ஆணவம், அகங்காரம், பொறாமை போன்ற தீய பண்புகளால் பல்வகை சோதனைகளுக்கு அடிமைப்பட்டு அல்லற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். எனவே இந்தத் தவக்காலத்தில் ஆணவத்தைவிட்டு அன்பையும் பொறாமையும் விட்டு மன்னிப்பையும் அணிந்து கொள் வோம். அப்போது சோதனைகள் சாதனைகளாக மாறும்.

ஜோன் ஹெபேர்ட்

இலங்கை மத்திய வங்கி

பொருத்தமான இடவசதியை
யாழ்ப்பாணத்தில் தேடுகிறது



இலங்கை மத்திய வங்கிக்கு அதன் அலுவலகத்திற்கும் சுற்றுலா விடுதிக்குமாக யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைகளினுள் பொருத்தமான பணிமனை தேவைப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்ட பணிமனை பின்வரும் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- வசதியான பாதைகளுடன் நகரப் பிரதேசத்தினுள் அமைந்திருக்க வேண்டும்.
- தளப் பரப்பு கிட்டத்தட்ட 6,000 சதுர அடி
- 10 ஊர்திகளை நிறுத்துவதற்கான இடவசதி
- மேலதிக அபிவிருத்திகளுக்கு போதிய இடவசதி
- மின்வலு, நீர் வழங்கல் மற்றும் ஏனைய வசதிகள்

ஆர்வமுள்ள தரப்பினர் கட்ட வரைபடத்தின் பிரதிகளுடன் சகல விபரங்களையும் 05.03.2010 இற்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பணிப்பாளர்
பணிமனைத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1

தொலைபேசி: 011-2477400, 011-2477403, 011-2477405
தொலைநகல்: 011-2477769, 011-2477730
மின்னஞ்சல்: premises@cbsl.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## மின்சார மீன்!



அமெரிக்காவில் 'எலக்ட்ரிக் ஈல்' என்ற மீன் உள்ளது. இந்த மீனால் 15 மின்விளக்குகளை ஒரு மணி நேரத்துக்கு எரிய வைக்க முடியும்.

உண்மைதான், சுமார் 600 வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் பெற்றது இந்த மீன். கடலுக்கடியில் தன் உணவுக்காகவும் எதிரிகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் தான் இந்த மீன் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இதைப் பயன்படுத்தியே இன்னொரு கடல்வாழ் உயிரினததை வீழ்த்தி விடுகிறது.

## தூங்காத விழிகள்!

நாம் உறங்கும் போது எல்லா உறுப்புகளுக்கும் ஓய்வு கிடைக்கும். கண்களுக்கு? இவை பெரும்பாலும் ஓய்வெடுப்பதில்லை. தூக்கத்தில் இமை மூடியிருந்தாலும் கருவிழி இங்கும் அங்கும் அலைந்து கொண்டு தான் இருக்கும். இதை 'ரெம்' என்கிறார்கள் மருத்துவர்கள்.

## பூவா? தலையா?

இதுவா, அதுவா; இப்படியா, அப்படியா ; நடக்குமா, நடக்காதா என்ற குழப்பநிலையில் ஏதேனும் ஒரு முடிவுக்கு வர நாணயத்தை சுண்டிப் போடுவது. நம் பழக்கம். இந்த உத்தியைக் கண்டு பிடித்தவர் யார் தெரியுமா? மிகச் சிறந்த உளவியல் அறிஞர் என்று போற்றப்படும் சிக்மண்ட் ஃப்பராய்ட்.

## தேங்காய் நண்டு!

அந்தமான் தீவுகளில் உள்ள குறிப்பிட்ட ஒரு இன நண்டுகளின் உணவு தேங்காய்தான். தென்னை மரத்தில் ஏறி தானாகவே தேங்காயைப் பறித்து உண்பது இந்த நண்டுகளின் சிறப்பு. கடல்நீல நிறம் கொண்ட இவை இரவு நேரம் மற்றும் மழைக்காலங்களில் தென்னை மரங்களில் ஏறி தேங்காயைப் பறித்து உரித்துச் சாப்பிடும். மற்ற நேரத்தில் ஈரமான பகுதியில் மற்றும் பவழப் பாறைகளின் இடுக்கில் தங்கிக் கொள்ளும்.



உங்களைக் கவனிக்க யாரோ ஒருவர் தயார்நிலையில்



உங்களுக்கு கை கொடுத்துதவ
ஒருவர் தயார் நிலையில்

சம்பத் வங்கி. சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிதி சம்பந்தமான உங்களது சகலவித நிதித் தேவைகளுக்கும், கூட்டிணைவு நிதித்துறையில் நீண்டகாலத் தீர்வுகளுக்கும் கை கொடுத்துதவவும் நம்பகமான நிறுவனம்.

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank


எதிர்காலத்தின் முன்னோடிகள்

The Banker
Bank of the Year 2009
SRI LANKA

www.sampath.lk

Sampath Bank PLC-PQ 144

# துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் சேவாக், அம்லா முன்னேற்றம்



(டுபாய்)

ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய வீரர் சேவாக் முதலி டத்துக்கு முன்னேறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை நேற்று முன்தினம் அறிவித்தது. துடுப்பாட்ட வீரர்களுக்கான தர வரிசைப் பட்டியலில் இந்திய வீரர் சேவாக் 863 புள்ளிகளைப் பெற்று முதலிடத்துக்கு முன்னேறினார். சமீபத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2சதங்களை விளாசிய சேவாக் இப்பெருமையைப் பெற்றுள்ளார்.

இத்தொடருக்கு முன் சேவாக் 6ஆவது இடத்திலிருந்தார். இப்பட்டியலின் 2வது இடத்துக்கு தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா (842புள்ளிகள்) முன்னேறியுள்ளார்.

தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடருக்கு முன் 9ஆவது இடத்திலிருந்த இந்திய வீரர் சச்சின் (805 புள்ளி) 6வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இத்தொடரில் சொதப்பிய காம்பீர் (824 புள்ளிகள்) முதலிடத்திலிருந்து 5வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

**ஹர்பஜன் முன்னேற்றம்**

பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய வீரர் ஹர்பஜன் அதிரடி முன்னேற்றம் கண்டுள்ளார். 12வது இடத்திலிருந்து இவர் 5இடங்கள் முன்னேறி 7வது இடத்தை பெற்றுள்ளார்.

சகீர் (729 புள்ளிகள்)6வது இடத்தில் உள்ளார். இப்பட்டியலின் முதலிடத் தில் தென்னாபிரிக்காவின் ஸ்ரையன் (867 புள்ளிகள்) நீடிக்கிறார்.

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

மஞ்சி பிஸ்கட் நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெறும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று காலை 8 மணிக்கு யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இவ் இறுதிப் போட்டியில் ஆண்கள் அணியில் வவுனியா பொலிஸ் அணியை எதிர்த்து, கோப்பாய் மத்திய விளையாட்டுக் கழகமும், பெண்கள் அணியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து, சங்கானை விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளது. (ச)

## எந்தவொரு நாடு...

கூட்டுப் படைத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டாலும் அவருக்கு எதிராக இராணுவச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என இராணுவச் சட்ட அதிகாரிகளுக்கு இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இராணுவத் தளபதியின் செயலாளரினால் இராணுவ பொலிஸாருக்கு இது குறித்த அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ச-5)

# பிரபல நாடகக் கலைஞர் பிச்சையப்பா காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் பிரபல நாடகக் கலைஞர் ஸ்ரீதர் பிச்சையப்பா சுகவீனம் காரணமாக நேற்றுக் காலை 8.00மணியளவில் கொழும்பில் காலமானார். இறக்கும்போது இவருக்கு வயது 47.

இவரது பூதவுடல் கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இன்று பிற்பகல் 2.00மணியளவில் மாதம்பிட்டிய மயானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1963ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் திகதி பிறந்தவர் ஸ்ரீதர் பிச்சையப்பா. சிறு வயது முதலே கலைத்துறையில் ஆர்வம் கொண்டவர்.

பிரபல நாடகக் கலைஞர், பின்னணிப் பாடகர், பாடலாசிரியர், இயக்குநர், எழுத்தாளர், மிமிக்ரி மற்றும் ஓவியம் என கலைத்துறைக்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தார். (ச-5)

## இலங்கை அரசாங்கத்தை...

யில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக சுதந்திரம் காணப்படுவதனால் பல தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனினும் இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாக நிலவி வரும் உறவுகள் தொடரும். அமெரிக்கா இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக கடந்த பல தசாப்த காலமாக காத்திரமான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கப்பூர் ஊடகமொன்றுக்கு அமெரிக்கா தொடரில் பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்ட கருத்து பரவலாக ஊடகங்களில் பேசப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு...

ளுமன்றஉறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், செ.கஜேந்திரன் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படாவிட்டால் அக் கட்சிக்கு எதிரான புதிய கட்சியொன்று உருவாக்குவதற்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இக் கட்சி எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள் அங்கம் வகிப்பார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்றுப் பருத்தித்துறையில் நடைபெற்ற இளைஞர் குழுவுடனான சந்திப்பில் மறைமுகமாகத் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் கேட்டபோது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்காலமும் என்ற தலைப்பில் பருத்தித்துறை இளைஞர் அணியினரால் நடத்தப்பட்ட கலந்துரையாடல் ஒன்றுக்கு எனக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது.

இக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட இளைஞர்களிடம் நான் ஒரு கருத்தை முன்வைத்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகத் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி கட்சி ஒன்று உருவாக்குவோமானால் அக் கட்சியிடம் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் கிராமிய மட்டத்திலிருந்து செயற்படுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்.

இதற்கு வேட்பாளராகப் போட்டியிட்டால் நான் பூரண ஒத்துழைப்பு வழங்குவேன் என இளைஞர்களிடம் தெரிவித்தேன். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில்இன்று முடிபை அறிவிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

அவ்வாறு கூட்டமைப்பின் முடிபு அறிவிக்கப்பட்டால் நாளை எனது முடிபை அறிவிப்பேன் என எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார். பருத்தித்துறை இளைஞர் அணியினரின் கலந்துரையாடல் நேற்று மாலை பருத்தித்துறை சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றனர். (ச-5)

## முன்னாள் சிறு...

மையில் 150சிறுவர் போராளிகளை அவர்களது பெற்றோர்களிடம் கையளித்தது.

மேலும் 373 சிறுவர் போராளிகள் இரத்மலானையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு மே மாதம் இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்த சுமார் 514சிறுவர் போராளிகளும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் அரசை கோரியதை அடுத்து இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் சிறுவர் போராளிகள் சிலரை அவர்களது பெற்றோர்கள் பொறுப்பு ஏற்பதற்கு தயக்கம் காட்டுவதாகவும் இந்த நிலையில் இவர்களை மீளவும் நீதிமன்றில் ஆஜர்செய்து நீதிமன்ற ஆலோசனையின் அடிப்படையில் செயற்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது. (ச-9)

# சுயநிர்ணய கோட்பாட்டை...

தமிழ்மக்களின் அடிப்படை கொள்கைகளுக்கு எதிரானவர்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பில் இடமளிக்கப்படக்கூடாது என்ற ஊடகங்களின் கருத்து தொடர்பாக பதிலளித்த அவர், புலம் பெயர்ந்த தமிழர்களின் கருத்தை வரவேற்கிறோம்.

தமிழ் மக்களின் அடிப்ப டைக் கொள்கைகளுக்கு எதிராக செயற்படும் எவரும் வேட்பாளர்களாக நியமிக்கமாட்டோம். அதேவேளை வெற்றுக்கோசங்களை எழுப்பிவிட்டு செயற்பாமல் இருப்பவர்களுக்கும் வேட்பாளர் நியமனங்கள் வழங்கப்படமாட்டாது. யார் யார் வேட்பாளர்களாக தெரிவு செய்யப்படுவார்கள் என்பது பற்றி இன்னும் முடிவுசெய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் அடிப்படை கோரிக்கைகளான தாயகம், தேசிய தன்னாட்சி என்ற அடிப்படையிலான கொள்கையை தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்துமா, என கேட்கப்பட்டபோது அவற்றுக்கான அத்தனை உள்ளடக்கங்களைத்தான் தாம் வலியுறுத்துவதாகவும் அதற்கான சொல்லாடல்களில் கவனம் செலுத்துவதை விட அவற்றின் உள்ளடக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டும் என்றும் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்துவரும் பிரதேசங்களில் சுயநிர்ணய உரிமையுடன் வாழக் கூடிய நிலையை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தில் செயற்படுவோம் என்றும் கூறினார்.

புதுடில்லியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அலுவலகம் திறக்கப்படுவது தொடர்பாக கேட்டபோது நடைபெறவுள்ள தேர்தலை தொடர்ந்து புதுடில்லியில் மட்டுமல்ல கனடாவிலும் சிட்னியிலும் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அலுவலகங்கள் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அதன் மூலம் புலம்பெயர்மக்களின் இணைவு உருவாகும் என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் தற்போதுள்ள கஜேந்திரனை மீளவும் வேட்பாளராக நியமிக்காமல் தமிழ்த் தேசியத்திற்கு எதிராக செயற்படுகிறீர்கள் என்றும் புதுடில்லியில் அலுவலகத்தை திறப்பதன் மூலம் தமிழ் மக்களை அழித்தவர்களுடன் கைகோர்க்கிறீர்கள் என்றும் சுரேஸ்பிரேமச்சந்திரனின் மனைவி கேரளத்தை சேர்ந்தவர் என்றும் இவற்றின் ஒட்டுமொத்தமாக தமிழினத்திற்கு துரோகம் செய்துவிட்டீர்கள் என்றும் நேயர் ஒருவர் கேட்டபோது கேள்விகள் கேட்டால் பதிலளிக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் கருத்தை கூறுகிறீர்கள் என்று கூறிய சம்பந்தன் நேர்காணலை இடைநிறுத்திக்கொண்டார். (ச-5)

# இந்திய அரசு எனது உறவினர்...

எனக்கு வாக்களித்துள்ளனர்.

சரத் பொன்சேகாவின் அரசியல் சாணக்கியமின்மை, அவருடைய பேச்சு, மக்கள் அவர் மீது கொண்டிருந்த பயம், பொருளாதாரத் துறையில் அனுபவமின்மை என்பனவே எனக்கு அதிகப்படியான வெற்றிக்குக் காரணமாக அமைந்திருந்தது.

சரத்பொன்சேகா தமது தேர்தல் பிரசார இறுதிக் காலத்தின்போது தேர்தல் வாக்குறுதிகள் குறித்து எதுவும் பேசாமல் என்னை கைது செய்து அதிபாதுகாப்புக்கூடிய போகம் வரை சிறையில் அடைக்க வேண்டும் போன்ற எனது குடும்பத்திற்கு எதிரான கருத்துக்களையே தெரிவித்துவந்ததார் .

என்னைப் பொறுத்தவரை நான் மேற்கொண்ட அபிவிருத்திகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ள அவர், சரத் பொன்சேகாவின் முகாமிலிருந்தோர் அதனை அறிந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனது கிராமங்களில் உள்ள மக்கள் பெருமளவில் வாக்களித்தனர். ஜனநாயகத்தை, சமாதானத்தை விரும்பிய நகர்ப்புற, குறிப்பாகக் கொழும்பு, கண்டி மக்களும் எனக்கு வாக்களித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் வெற்றிக்குக் காரணமானவர் யார் என்ற விடயத்தில் மக்கள் தமது வாக்குகள் மூலம் என்னையே தெரிவு செய்துள்ளனர்.

தாஜ்மஹாலைக் கட்டிய மேசனையும் அல்லது சிரேஷ்ட பொறியியலாளரையும் மக்கள் நினைவு கூருவதில்லை. எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறலாம் என்ற நம்பிக்கையுண்டு.

ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டத்தினரும் எம்முடன் இணைவார்கள். ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சென்று மகிந்த போடா , கோத்தபாயா போடா ,பசில் போடா எனத் தமிழிலில் பேசியுள்ளார்.

இதன்மூலம் என்னை நிராகரிக்குமாறு மக்களிடம் அவர் கேட்டுக் கொண்டார். இலங்கையின் சமாதானமான இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

13-வது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் பிரச்சினையை முறையாகத் தெரிந்து கொள்ளாது அவசரமாகக் கொண்டுவரப்பட்ட ஒன்று. தற்போதைய சூழ்நிலையில் பொலிஸ் அதிகாரத்தைத் தவிர ஏனைய அதிகாரங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிபடைந்து விட்டது. பொதுத் தேர்தல் நடைபெறப் போகின்றது. அடுத்ததாக வடக்கு மாகாணத்திற்கான தேர்தலை நடத்திய பின்னரும் இடம்பெயர்ந்தோரைக் குடியமர்த்திய பின்னரே இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த முடியும்.

ஏற்கனவே வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்து தமிழ்-முஸ்லிம் இளைஞர்கள் படைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களை மீண்டும் பயிற்சிக்கு உட்படுத்தாது அவர்களுக்கு பொலிஸ் பயிற்சிகள் மாத்திரம் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் அவர்கள் தென்னிலங்கையிலும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். கொழும்பைப் பொறுத்தவரையில் 20 வருடங்களுக்கு முன்னர் சிங்களவர்கள் 90 வீதமான இருந்த நிலைமை மாறி இன்று அவர்களின் வீதம் 30 ஆகக் குறைந்துள்ளது.

இந்த நிலையில் தமிழ்- முஸ்லிம் மக்களின் சனத்தொகை கொழும்பில் அதிகரித்து ள்ளமையானது எவ்வித பிரச்சினையும் ஏற்படுத்தாது.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். அதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட கட்சிகள் அதில் பங்கேற்க வேண்டும்.

அதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அவர்கள் தம்முடன் இணைந்துவர விருப்பம் இல்லாதவர்களாக இருப்பின் புதிய பிரதி நிதிகள் தெரிவு செய்யப்படும்போது அவர்களுடன் இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்துவேன்.

இந்தியா எனது உறவினர், இலங்கைக்கு உதவி செய்யும் ஏனைய நாடுகள் எமதுநண்பர்கள் என்றார். சரத் பொன்சேகாவின் கைது தொடர்பாகக் கருத்துரைத்துள்ள அவர்,

நீதித்துறையின் முன்னால் அவரின் விடயம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளமையால் தம்மால் அதில் தலையிட முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் நாடு வன்முறைகளுக்கு உள்ளாகியிருக்கும் என மகிந்த ராஜபக்ஷ தமது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## 53 சுயேட்சைக் குழு...

சுயேட்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் 10 சுயேட்சைக் குழுக்களும், யாழ்.மாவட்டத்தில் 2 சுயேட்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

இதேவேளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 2 உம், சுயேட்சைக் குழுக்கள் 2 உம், பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

ஜனசெரபெரமுன கொழும்பு, கம்பஹா, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன.

ஜாதிக சங்வத்தன பெருமுன கொழும்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது. (ச-14)

## சபாநாயகர்...

மன்ற உறுப்பினரும் ஆறாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகரு மான லொக்குபண்டார இந்த முடிபை எடுத்துள்ளார்.

இவரது புதல்வர் பதுளை மாவட் டத்தில் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச-5)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி சசிகலாதேவி பாலானந்தன்
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சங்கநாயகி பாலானந்தன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் அழகேந்திரன் (இந்திரன்)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அழ கேந்திரன் (இந்திரன்) 20.02.2010 (சனிக்கிழமை) நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் காலஞ்சென்ற இரத் தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், யோகேஸ் வரியின் அன்புக் கணவரும், பண்ணாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மாணிக்கவாசகம் சரஸ் வதிதேவியின் மருமகனும் அபிராமி, அனார்த்தனி, அருந்ததி ஆகி யோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரன் (கனடா), மகேந் திரன் (இளவரசி புடவையகம், யாழ்ப்பாணம்), இராசேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற் றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மதவடி ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்.



வெள்ளிவிழாவை முன்னிட்டு
அனைத்து கணினி பாடநெறிகளுக்கும் CSC வழங்கும்
75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை
25 YEARS
மேலதிக விபரங்கள் எமது பயிற்சிமையங்களில்
ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088


## தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் கிளிநொச்சி

மேற்படி கழகத்தில் உறுப்புரிமை பெற்றிருந்த முன்னைய உரிமை யாளர்கள் புதிய உறுப்புரிமையினை எதிர்வரும் 09.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் செயலகத்துக்கு முன்பாக இயங்கும் எமது பணிமனையில் வந்து பதிவு செய்து உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

புதிதாக எமது கழகத்தில் இணைய விரும்புவோர், கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவர்களாக இருப்பதுடன் அதனை கிராமசேவையாளர் ஊடாக, உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றுடன் அல்லது கடிதத்துடன் எமது கழகத்தில் சமர்ப்பித்து புதிய உரிமையாளர்களாக உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

தகவல்:
க.ஜெகதீஸ்வரன் – தலைவர்
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,
கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் செல்லத்துரை (அல்லைப்பிட்டி)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பாரிஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் செல்லத்துரை 15.02.2010 திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந் துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் செல்லத்துரை யின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனக சபை (ராசா) லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும், விஸ்வலிங்கம் கற்பகபிள்ளை (செல்லம்) தம்பதி யினரின் மருமகளும், அன்னபூரணத்தின் (தங்கமுத்து) மைத்துனியும், தனலட்சுமி (யாழ்) விஜயலட்சுமி (யாழ்), கோபாலகிருஷ்ணன் (கொழும்பு), வசந்தமல்லிகா (France), தயாநாயகி (France), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற விநாயகரட்ணம் (மண்டைதீவு), இராசரத்தினம் (மண்கும்பான்), மாலினி (கொழும்பு), சிவநாதன் (France), சந்திரகுமார் (France) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஜயரூபன் (ரூபன் புத்தகசாலை-யாழ்) காந்தரூபன் (France), நாகலோஜினி (யாழ்), லிங்கரூபன் (யாழ்), கிருஷ்ணராதா (கொழும்பு), கோபிகா (கொழும்பு) துவாரகன் (லண்டன்), ராகவந்தி (France), ராதாகிருஷ்ணன் (France), கிருசாந்தன் (France), சிவப்பிரகாஸ் (France), வித்தியாபதி (France) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கோகுல்நாத்தின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 7 Avenue de la Reúnion-93600 Aulnay Sous Bios ல் உள்ள அவரது இல்லத்தில் 22ஆம் திகதி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அவரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொழும்புக்கு எடுத்துவரப்பட்டு 25.02.2010 வியாழக்கிழமை பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

198/5, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
பேரன்
விஜயரூபன் (ரூபன்)

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

(ஓய்வு பெற்ற இரசாயனவியல் ஆசிரியர்,
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி,
நைஜீரியா பல்கலைக்கழகம்)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் பதிவாளர் வீதி, திருநெல்வேலி கிழக்கை (தலங்காவில் பிள் ளையார் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை (19.02.2010) வெள் ளிக்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கமாணிக்கத்தின் அன்புக் கண வரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்த சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் துரைச் செல்வி, ஐங்கரநேசன், ஆறுமுகநேசன், பத்மினி அனு ஷியா, ஸ்ரீ தத்தாத்திரேயநேசன், ரவிச்சந்திரநேசன், திருக்கேதீசரநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன், ஆனந்தமூர்த்தி, பாமினி, நந்தினி, எழிலரசி (பிரதேச வைத்தியசாலை வேலணை), கெங்காதேவி, கோமதியா (இந்திரா) ஆகியோரின் மாமனாரும்,

அஞ்சலி, பைரவி, துஷ்யந்தி, துவாரகன், துஷ்யந்தன், நிலானி (வள்ளி), கம்பன், யுவேதா, திவ்யநேசன், நிதர்சன் பத்திரன், நிவேதா மாணிக்கம், சவரினா, எலிசபெத், பெஞ்சமின் ஆகி யோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.02.2010 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 10.30 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பதிவுகாரர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
(தலங்காவில் பிள்ளையார் கோவிலடி),
யாழ்ப்பாணம்.

தகவல் :
பொ. ஐங்கரநேசன்
பொ.ஸ்ரீதத்தாத்திரேயநேசன்


TCN EXPRESS INTERNATIONAL
உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்.வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
(C-4481)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.